Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT


# வலம்புரி
Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 01 | வியாழக்கிழமை | (18.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 273


# முஸ்லிம் மக்களுக்குத் தனியான இடைக்கால நிர்வாகம் தேவை!

## மறுத்தால் அரசுக்கான ஆதரவு விலக்கப்படும்
## நோர்வேக் குழுவிடம் முஸ்லிம் எம்.பிகள் எடுத்துரைப்பு

(நமது நிருபர்)

**✪வடக்குக் கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கி தனியான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்பட வேண்டும்.**

**✪சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித் தரப்பாக கலந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.**

**இல்லையேல் அரசாங்கத்துக்கு வழங்கிவரும் ஆதரவை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீள் பரிசீலனை செய்ய வேண்டி வரும்.**

**இவ்வாறு வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் நேற்று நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோரைச் சந்தித்து முஸ்லிம் மக்களின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்துகையிலேயே மேற்கண்டவாறு தமது முடிவை வெளிப்படுத்தி வலியுறுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு முஸ்லிம் மக்களின் நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்தினரென்று பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியச் செயலாளரும் மட்டக்களப்பு எம்.பியுமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்டால், அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளக் கூடாதென்று வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் அரசாங்கத்தை வலியுறுத்தும்.

அதனையும் மீறி அரசாங்கம் பேச்சில் கலந்து கொண்டால் அரசுக்கான ஆதரவை விலக்குவது (10ம் பக்கம் பார்க்க)

# எரிக்சோல் - ஹெல்கீசன் நேற்று இலங்கை வந்தனர்!

## பிரதமருடன் சந்திப்பு-இன்று வன்னி செல்வர்

(கொழும்பு)

நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகிய இருவரும் நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

முற்பகல் 9.20 மணியளவில் ஒஸ்ரா விமானத்தில் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் அரசாங்கப் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியுள்ளனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஒழுங்குபடுத்தும் நோக்கிலேயே இவர்களது விஜயம் அமைந்துள்ளதாக இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் அறிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் அவரின் முக்கிய அமைச்சர்களை நோர்வேக் குழுவினர் சந்தித்து பேச்சு நடத்தியதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இவர்கள் இருவரும் இன்று வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடனும் பேச்சுக்களை நடத்துவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## ஒஸ்லோ மாநகர சபை உறுப்பினராக ஈழத்தமிழர் தெரிவு

(கொழும்பு)

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற மாநகர சபைத் தேர்தலில் ஈழத் தமிழர் ஒருவர் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

பாலசிங்கம் பாஸ்கரன் என்ற ஈழத் தமிழரே வெற்றியீட்டி ஒஸ்லோ மாநகர சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 15 பேர் கொண்ட ஒஸ்லோ மாநகர சபையில் இவர் 11 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். எதிர்க் கட்சியினரின் தீவிர பிரசாரங்களுக்கு மத்தியில் இவர் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# தமிழ் அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவு

## ஜனாதிபதி விடுத்தார்

(கொழும்பு)

ஜனநாயகரீதியிலான அரசியலில் ஈடுபடும் அனைத்து தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பு அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கம் இவர்களுக்கு வழங்கிய பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தாது தொடர்ந்து வழங்குமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக ஜனதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி (10ம் பக்கம் பார்க்க)

# ஜப்பான் தூதுவர் அகாஷி இந்தியாவுக்கு பயணமானார்

(புதுடில்லி)

ஜப்பானின் விஷேட தூதுவர் யசூசி அகாஷி இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். கொழும்பிலிருநது நேற்று முன்தினம் புதுடில்லி சென்றுள்ள அகாஷி அங்கு இந்தியத் தலைவர்களைச் சந்தித்து இலங்கையின் சமாதான முயற்சிகளின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தவுள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து இலங்கை அரசியல் தலைவர்களுடனும் விடுதலைப் புலிகளுடனும் நடாத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து அகாஷி விளக்கிக் கூறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியாவுக்குத் தெளிவுபடுத்துவது, இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நல்லுறவை வலுப்படுத்துமென்று தூதுவர் அகாஷி தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# முன்னாள் கல்வி அமைச்சர் ஐ.தே.கட்சிக்கு தாவுவார்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரிட்சாட்ட பத்திரன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார்.

இந்த வாரத்திற்குள் நான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளப்போகிறேன். அடுத்து வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக தென்மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளேன் என அவர் கூறியுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

# உயர் பாதுகாப்பு வலய விவகாரம்
# பாதுகாப்பு அமைச்சில் இன்று உயர்மட்ட மாநாடு!

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துதல் மற்றும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துதல் தொடர்பாக ஆராயும் உயர் மட்ட மாநாடு ஒன்று இன்று பாதுகாப்பு அமைச்சில் இடம் பெறவுள்ளது.

சமாதான முயற்சியில் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு குறைந்தளவிலேனும் தீர்வு காணும் பொருட்டு இராணுவத்தினரால் பாதுகாப்புக் கருதி முக்கியமாகப் பேணப்பட வேண்டிய பிரதேசங்கள் மற்றும் கட்டடங்களைத் தவிர ஏனைய உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள வீடுகளையும், விவசாய நிலங்களையும், வர்த்தக நிலையங்களையும் பொது மக்களிடம் மீண்டும் ஒப்படைப்பது தொடர்பாக ஆராயும் பொருட்டே இந்த உயர் மட்ட மாநாடு கூட்டப்படுகிறது.

பாஷையூர், கொழும்புத்துறை, (10ம் பக்கம் பார்க்க)

# விசர் நாய்க் கடிக்கு சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

விசர்நாய் கடித்த சிறுவனொருவன் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் பரிதாபகரமாக மரணமானார்.

சாவகச்சேரி பெருங் குளத்தைச் சேர்ந்த தா.சுரேன்(வயது11) என்ற சிறுவனே மரணமானவராவார்.

பிரஸ்தாப சிறுவன் சில மாதங்களுக்கு முன்னர் பக்கத்து வீட்டு நாய்க் குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்த சமயம் அந்நாய் கடித்துள்ளது.

அதற்கு சிறுவன் மருந்தும் கட்டி, ஊசியும் போட்டிருந்தார்.

எனினும், திடீரென உடலில் தடிப்பு ஏற்பட்டதை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்து போதும் நேற்றைய தினம் சிறுவன் உயிரிழந்துள்ளான். (இ-7)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வைத்தியரின் சொந்தப் பாவனையில் நல்ல நிலையில் உள்ள TOYOTA HIACE விற்பனைக்கு உண்டு (சகல ஆவணங்களுடனும்) தொடர்பு: T.PHONE -0777-589608

(7463)


## கணனிப் பயிற்சி

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்று வரும் கணனிப் பயிற்சி நெறியின் 2வது பிரிவு இம் மாதத் தொடக்கத்தில் இருந்து ஆரம்பமாகியுள்ளது. (உ-70)

## மீளக் குடியமர்ந்தவர்களுக்கு தற்காலிக கொட்டகைகள்

(மருதங்கேணி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் சேவா லங்கா நிறுவனத்தினால், பளைப்பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்களுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்தாவில், அரசர்கேணி கச்சார் வெளி, பச்சையடி, தர்மகேணி, பேராலை ஆகிய இடங்களில் உள்ள மிகவும் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் 120 குடும்பங்கள் மேற்படி தற்காலிக கொட்டகைகள் மூலம் பயனடையவுள்ளன.

இத்திட்டம் மேலும் சில பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-35)

## ரணிலை அதிகாரங்களால் மிரட்டும் அம்மையார்




## சமாதான நீதிவானாக நியமனம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் பராக்கிரமராஜா சிவசூரியர் நீதி அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் கடந்த 5ம்திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சங்கானை சிவப்பிரகாச ம.வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கலலூரி, சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், மட்டுவில் ம.வி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.



சங்கானை கிழக்கு மத்தி விவசாய சம்மேளனத் தலைவராகப் பணியாற்றிய இவர் தலை சிறந்த சமூக சேவையாளருமாவார்.

## இந்திய கடற்படைத் தளபதியின் இலங்கை விஜயம் இரத்து

(கொழும்பு)

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற் கொள்ளவிருந்த இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் மொகதீவ்ரசிங் தனது விஜயத்தை இரத்துச் செய்துள்ளார்.

பாகிஸ்தான் கூட்டு நடவடிக்கைக் குழுத் தலைவர் ஜெனரல் மொகமட் அஸீஸ்கானின் இலங்கை விஜயம் குறித்து அரசாங்கம் இந்தியாவுக்கு உரிய முறையில் அறிவிப்பு விடுக்காமையே இதற்குக் காரணம் என த ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் மற்றும் கூட்டு நடவடிக்கைக் குழுத்தலைவர் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (தி-60)

## அலங்கார உற்சவம்

(வேலணை)

நாச்சிக்குடா கரடிக்குன்று தான்தோன்றி ஆதிநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 10ம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 24ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

(உ-47)

## 254 வெளிநாட்டவர்களையும் திருப்பி அனுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் இத்தாலி செல்லும் நோக்குடன் இலங்கையில் தங்கி இருந்த வேளை பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள 254 வெளிநாட்டவர்களையும், அவர்களின் சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வுச் சட்ட மூலத்தின் கீழ், உள்துறை அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இவ்வெளிநாட்டவர்களை திருப்பி அனுப்புவதற்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுவருகின்றன.

தற்போது வெளிநாடு சென்றுள்ள உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடு திரும்பியதும், வெளிநாட்டவர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கை செயல்படுத்தப்படும் என குடிவரவு குடியகல்வு திணைக்கள நிர்வாகி மேவின் விஜயசேகர தெரிவித்துள்ளார். (தி-61)

## நடமாடும் வங்கிச் சேவை

(மருதங்கேணி)

முழங்காவில் பிரதேச மக்களின் நன்மை கருதி கிளிநொச்சி இலங்கை வங்கி கிளை நடமாடும் வங்கிச் சேவையை அங்கு மேற்கொணடு வருகிறது.

வாரத்தில் ஒரு நாள் முழங்காவில் கமநல சேவை நிலையத்தில் இந் நடமாடும் சேவை இடம்பெற்று வருகின்றது.

(உ-35)

## திலீபன் நினைவு நாட்களில் சமூக சேவைப் பணிகள்

(கந்தரோடை)

தியாகி திலீபன் நினைவு நாட்களில் வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் எற்பாட்டில் சிரமதான நிகழ்வுகள் மற்றும் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் என்பன இடம் பெற்று வருவதாக பேரவையின் செயலாளர் இ.சாம்பசிவம் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்தோர் நலனபுரி நிலையங்கள், வைத்தியசாலைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இச் சமூகசேவைகள் இடம் பெற்று வருகின்றன.

இப் பணிகளில் ஊரக, பிரதேச எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (உ-103)

## மக்களையும் — புலிகளையும் பிரிக்க புதிய சக்தியொன்று முயற்சிக்கின்றது

### இளம்பரிதி எச்சரிக்கை

(கோப்பாய்)

ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றுடன் கூடிய சமூக, பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலமே முழுமையான சமூக அபிவிருத்தியின் இலக்கை அடைய முடியும். இச்சீரிய நோக்கத்திற்கு அனைத்து தரப்பினரதும் அரவணைபபும் ஒத்துழைப்பும் முழுமையான பங்களிப்பும் அவசியமானது.

யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கோப்பாய்ப் பிரதேச எழுச்சிப் பேரவையின் அலுவலகத் திறப்பு விழாவிலும் தொடர்ந்து நடைபெற்ற மாதாந்த சங்கம நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

பேரவைச் செயலாளர் ந.சிவகடாட்சம தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் அதேவேளையில் பொருளாதாரம் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

எமது மக்களின் போராட்டம், விடுதலை ஆகியவற்றுக்கிடையே உறவைத் துண்டித்து இடைவெளியை ஏற்படுத்தி உறவைப் பிரிக்கும் வகையில் புதிய சக்தியொன்று செயற்பட்டு வருகின்றது. இச் செயற்பாடு வெற்றி பெற எமது மக்கள் ஒரு போதும் துணைபோக மாட்டார்கள்.

கண்ணிருக்கும் வரையே நாம் காட்சிகளைக் காணமுடியும். கண்ணை இழந்தபின் எதையும் காணமுடியாது. கண் போன்றதே எமது மண், அதை நாம் இழந்து விட்டால் அதன்பின் எமக்கு இழப்பதற்கு எதுவுமில்லை. எனவே இந்த மண்ணைப் பாதுகாப்பது ஒவ்வொரு தமிழரதும் தலையாய கடமையும் காலத்தின் தேவையுமாகும்.

இன்று இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய எழுச்சிப் பேரவை, ஊரகங்களில் சேவையாற்றி வருகின்ற சனசமூக நிலைய அமைப்புக்கள், ஏனைய சங்கங்கள் ஆகியவற்றின் தாய் அமைப்பாகச் செயற்பட்டு ஒழுக்கம், பண்பு சார்ந்த சமூக கிராமிய பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளும் அமைப்பாகச் செயற்படவுள்ளது என்றார். (உ-79)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் கு. வன்னியசிங்கத்தின் 44வது நிறைவு தின நிகழ்வு நேற்று தமிழர் விடுதலைக்கூட்டணி யாழ் அலுவலகத்தில் நடை பெற்றபோது அதில் கலந்து கொண்ட கட்சியின் பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.

(படம்:ஜெ.ஜெராட்)


## கேள்வி அறிவித்தல்

### கல்வியங்காடு பொதுச் சந்தை புனரமைப்பு

2003.09.04 ம் திகதி கேள்வி அறிவித்தலுக்கு மேலதிகமாக, கேள்வி கோரல் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்வி விண்ணப்பம் பெறும் கடைசித் திகதி 2003.09.25ம் திகதி பி.ப.3.00 மணி

கேள்வி கிடைக்கக் கூடிய கடைசித் திகதி 2003.09.26 பி.ப.2.00 மணி

கேள்வி திறக்கப்படும் நேரம்- 2003.09.26 பி.ப.3.00 மணி

செ.பத்மநாதன்,
தலைவர்
மாவட்ட கேள்விச் சபை.
யாழ்ப்பாணம்.

(C/6639)

## கேள்வி அறிவித்தல்

### குருநகர் மாடிவீட்டு கட்டிட திருத்த வேலைகள்

2003.09.04 ம் திகதி கேள்வி அறிவித்தலுக்கு மேலதிகமாக, கேள்வி கோரல் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்வி விண்ணப்பம் பெறும் கடைசித் திகதி 24.09.2003 பி.ப.3.00 மணி

கேள்வி கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 25.09.2003 பி.ப.2.00 மணி

கேள்வி திறக்கப்படும் நேரம்- 2003.09.25 பி.ப.3.00 மணி

செ.பத்மநாதன்,
தலைவர்
மாவட்ட கேள்விச் சபை.
யாழ்ப்பாணம்.

(C/6638)

# ஸ்ரீ.மு.கா.கட்சியின் முடிவுகளால் அரசியலில் திருப்பங்கள் ஏற்படும்

## அமைச்சர் ரவுப்ஹக்கீம் எச்சரிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக் காகவே மறைந்த தலைவர் எம்.எச். எம்.அஸ்ரப் ஸ்ரீலங்கா முஸ்லிம்



காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளை ஸ்தாபித்தார்,

ஆனால், சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக இவ்விரு கட்சிகளும் இன்று பிரிந்து செயற்படுகின்றன என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஸ்ரப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கல்முனையில் நடைபெறற அமரர் எம்.எச்.எம்.அஸ்ரப்பின் 3ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவா, பாதுகாப்பற்ற பயங்கரமானதொரு அரசியல் சூழ்நிலையிலேயே முஸ்லிம் மக்கள் தற்போது வாழ்ந்து வருகின்றனர். இதிலிருந்து அவர்கள் மீள வேண்டுமானால், முஸ்லிம் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை அவசியம்.

இதுவே மறைந்த தலைவரின் ஆசையும் அவாவும், இவ்விரு கட்சிகளுக்கும் இடையே எந்தச் சந்தர்ப் பத்திலும் பிரிவினை வரக் கூடாது என்பதுவே அவரது நோக்கமாகவும் இருந்தது.

தற்போது சந்தர்ப்ப வசத்தால் பிரிந்திருக்கும் இவ்விரு கட்சிகளும் ஒற்றுமைப்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ரவூப்ஹக்கீம், அடுத்த ஓரிரு நாட்களுக்குள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தீர்க்கமான சில அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

அந்த முடிவுகள் நாட்டின் தேசிய அரசியலில் திருப்பங்களை ஏற்படுத் தக்கூடும்.

முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகளை திருப்திப்படுத்தாமல் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தர தீர்வு ஒன்று ஏற்படுவதற்கு சாத்தியம் இல்லை என்பதை சர்வ தேசம் உணர்ந்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கும்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை முஸ்லிம்களின் அரசியல் அமைப்பாக அங்கீகரித்து வட-கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முஸ்லிம்கள் எல்லோரும் அவ்வமைப்பின் அணியாக நின்று, முஸ்லிம் சமூகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை அரசியல் ரீதியாக முன்னெடுக்கவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

(தி-61)

# தியாகி திலீபனின் நினைவகலா நாட்கள்




## திலீபன் ஒரு பௌர்ணமி

புலியும் புயலும் அழுதன
பூகம்பம் பூமியில் வெடித்தன
விழியும் விழியும் சிவந்தன
வேங்கையின் உறுமல் தொடர்ந்தன

ஒப்பந்தம் மீறிய பாரதம்
ஓர்பந்தும் அழிந்ததும் திகைத்தது
காந்தியை வணங்கிடும் தேசம்
காந்தீயப் போரினை உதைத்தது

நீரின்றி உணவின்றி திலீபன்
நீதியை விதைத்து திலீபனானான்
ஊருக்குள் விளைந்த இரத்தங்கள்
உரிமைச் சமர் தமிழீழமானது

போரும் சமாதானமும் தோற்பதில்லை
பொய்களை தமிழினம் ஏற்பதில்லை
ஏரும் வாளும் வீழ்வதில்லை
ஏமாறும் வாழ்வு எமக்கில்லை

வித்யாசன்.

# தமிழ்மொழிப் பயிற்சியை பூர்த்தி செய்த பொலிஸாருக்கு ஊதிய உயர்வு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் பணியாற்றுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ்மொழியை கற்பிக்கின்ற திட்டம் அடுத்தவருடம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரச மொழிகள் ஆணைக் குழுவும், அரச மொழித்திணைக் களமும் இணைந்து இந்தத்திட்டத்தை அமுல்செய்யவுள்ளன.

வடக்கு-கிழக்கில் கடமையாற்றும் 60ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களில் 6ஆயிரத்து 500 பேரே தமிழ்மொழியில் பேசக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள் என்று அரச மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி தெரியாது வடக்கு-கிழக்கில் பணியாற்றும் பொலிஸார் பல்வேறு இன்னல்களைச் சந்திக்கின்றார்கள். இதனால் அவர்களுக்கு தமிழ் மொழியை கட்டாயமாக கற்பிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம் மொழிப் பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கு சம்பள உயர்வை வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-05)

# வெளிநாடு செல்ல முற்பட்ட 10 பாகிஸ்தானியர் கைது

(கொழும்பு)

இலங்கை ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் நோக்கில் தெமட்டக் கொடவில் தங்கியிருந்த 10 பாகிஸ்தானியர் களை குடிவரவு, குடியகல்வுத்திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து, தெமட்டக்கொடப் பகுதியில் வைத்து இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் வெளிநாடு செல்வதற்காக இந்தப் பத்துப்பேரும் இலங்கையர் ஒருவருக்கு 28லட்சம் ரூபாவை வழங்கியுள்ளனர். தற்போது இந்நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இவ்வாறு இலங்கையூடாக சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் நோக்கில தங்க வைக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் தொடர்ந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை அடுத்து, இந்நடவடிக்கை கடந்த சில மாதங்களாக குறைந்திருந்ததாக அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.

(தி-60)

# மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட 177 பொலிஸாருக்கு எதிராக சட்டநடவடிக்கை

(கொழும்பு)

தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் மீது மனிதஉரிமைகள் மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 177 பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவர்கள் அனைவருக்கும் எதிராக வழக்குத்தாக்கல் செய்வது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெறப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 60 பேருக்கு எதிரான பொலிஸ் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன.

பொலிஸ்மா அதிபர் ா.ஈ.ஆனந்தராஜாவின் பணிப்புரைக்கு அமையவே இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

அண்மையில் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள்மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்ட மனிதஉரிமை மீறல் மனுக்கள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதும் தெரிந்ததே.

(தி-61)

# யாழ்ப்பாணத்தில் இருந்து பொங்குதமிழ்ப் பானை வவு.எடுத்துச் செல்லப்பட்டது

(வவுனியா)

வவுனியாவில் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கான பொங்கு தமிழ்ப் பானை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா எடுத்துச்செல்லப் பட்டுள்ளது.

வவுனியா மாவட்டக்.கிராமங்கள் தோறும் இப் பொங்குதமிழ்ப் பானை ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படவுள்ளது.

இதேவேளை, வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினா, பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவைச் சந்தித்து பொங்குதமிழ் நிகழ்வில் பங்குகொள்ளவுள்ளவர்கள் குறித்தும் புலிக்கொடி ஏற்றுவது குறித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இச்சந்திப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவித்த வவுனியா பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழுவினர்,

அரச ஊழியர்கள், அரச உயர் அதிகாரிகள் உட்பட பலருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளதுடன், புலிக்கொடி ஏற்றுவதை எந்தவிதத்திலும் தடுக்க முடியாது என உறுதியாகக் கூறியுள்ளோம் என்றனர்.

இதேவேளை, வவுனியாவில் கடந்த வருடம் பொங்குதமிழ் நிகழவு நடைபெற்றபோது அடிக்கல் நாட்டப்பட்ட பொங்குதமிழ் நினைவுத்தூபி பொங்குதமிழ் நாளன்று வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-13)

# கூட்டம்

(சில்லாலை)

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் வருடாந்த அபிவிருத்திச் சங்கக்கூட்டம் இன்று பி.ப 2.00மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் ஜீ.ரி.சற் மற்றும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-58)

# உலக ஆசிரியர் தினத்தில் சிறந்த ஆசிரியர்களைக் கௌரவப்படுத்த ஏற்பாடு

(மருதங்கேணி)

உலக ஆசிரியர் தினத்தில் வவுனியா தெற்கு வலயத்தில் கல்வி கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்களை கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

தேசியமட்டப் போட்டிகளில் மாணவர்களைப் பங்குபற்ற வழிப்படுத்தியவர்கள், கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் அதிக வருடம் சேவை புரிந்த ஆசிரியர்கள், தரம் 5,11,13 வகுப்புக்களில் பொதுப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்காக பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மேலதிக வகுப்புக்களை நடாத்திய ஆசிரியர்கள், 2002ஆம் ஆண்டில் மிகக் குறைந்த லீவுபெற்ற ஆசிரியர்கள், தேசிய ரீதியில் பரிசுபெற்ற ஆசிரியர்கள், நூல்வெளியீடு செய்த ஆசிரியர்கள், திறமையாக சேவையாற்றி 2002ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற அல்லது மரணமடைந்த ஆசிரியர்கள் ஆகியோரையே இவ்வகையில் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(உ-35)

# திருமலை விவகாரம் குறித்து ஜனாதிபதிக்கு விரைவில் பதில்

## பிரதமரின் செயலர்ளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் எக்காரணங்களின் அடிப்படையிலும் இடைநிறுத்தப்பட மாட்டாது என பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் யோசனைகள் கிடைக்குமென அரசாங்கம் காத்திருக்கிறது.

புலிகளின் இவ் யோசனைகள் இன்னும் ஓரிரு வாரங்களில் கிடைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த 12ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அனுப்பப்பட்ட திருமலை விவகாரம் குறித்த கடிதத்திற்கு, பிரதமர் விரைவில் பதில் அனுப்பவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-61)

# பேரழிவு ஆயுதங்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பே; ஈராக்கில் அழிக்கப்பட்டுவிட்டன

## முன்னாள் ஐ. நா. பிரதம ஆயுத பரிசோதகர் இப்பொழுது கூறுகிறார்

(நியூயோர்க்)

ஈராக் வசமிருந்த பாரிய அழிவைத் தரும் ஆயுதங்கள் 10 ஆண்டுகளுக்கு முன்னரே அழிக்கப்பட்டிருக்கலாம் என்றும், இந்த விடயம் தொடர்பான உளவறியும் நிறுவனங்களின் அறிக்கைகள் பிழையானவையாக இருக்கலாம் என்றும் நம்புவதாக முன்னாள் ஐ.நாவின் பிரதம ஆயுத சோதனையாளர் ஹான்ஸ் பிளிக்ஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய வானொலிக்கு அவர் அளித்த பேட்டியில், 1991 ஆம் ஆண்டளவில் அல்லது அதற்கு முன்னதாக உயிரியல் இரசாயன மற்றும் அணுவாயுதங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டிருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

1991 ஆம் ஆண்டில் ஈராக்கில் இரகசிய அணுவாயுத உற்பத்தித் திட்டம் இருந்ததை சர்வதேச அணு சக்தி நிறுவனம் கண்டுபிடித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து அந்த நிறுவனத்தின் ஆயுத சோதனையாளர்கள் 7 வருடங்களாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

1978 ஆம் ஆண்டளவில் இந்த ஆயுத சோதனையாளர்களை ஈராக் வெளியேற்றியிருந்தது.

இதனபின்னர் ஐ.நாவின் தலைமை ஆயுத சோதனை அதிகாரியாக ஹான்ஸ் பிளிக்ஸ் 3 வருடங்களில் பாரிய அழிவைத்தரும் ஆயுதங்கள் பற்றி ஈராக்கில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும், எந்தவித ஆயுதங்களையும் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் இராணுவத்தினர் ஈராக் மீது தாக்குதல்களை ஆரம்பிக்க ஆயத்தங்களைச செய்ததும் ஹான்ஸ் பிளிக்ஸ் தலைமையிலான ஆயுத சோதனையாளர்கள் மார்ச் மாதத்தில் ஈராக்கை விட்டு வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-9)

## 116வது பிறந்த நாள் கொண்டாடிய மூதாட்டி

(டோக்கியோ)

உலகிலேயே வயது முதிர்ந்தவர் என்று கருதப்படும் ஜப்பானிய மூதாட்டி தன்னுடைய 116வது பிறந்த நாளை நேற்று கொண்டாடியுள்ளார்.

ஹமாத்தாஹொங்கோய்என்று அழைக்கப்படும் அந்த மூதாட்டி 1287ஆம் ஆண்டு ஜப்பானின் தெற்குப் பகுதி கியூஷீதீவில் பிறந்தார்.

அதே தீவில் பிறந்த யுகுஸிசு ஹான்ஸி என்கின்ற 114 வயதான முதியவர் தான் உலகிலேயே முதல வயது போன ஆண் என்றும் கூறப்படுகின்றது.

அவரால் 2 நாட்கள் முழுக்க உறங்கி அடுத்த 2 நாட்களும் முழுக்க கண் விழிக்க முடியும்.அது ஜப்பானல் பெருத்த ஆச்சரியத்தை தோற் றிவிக்கின்றது. அவருடைய சந்ததியினர் பலர் இருக்கிறார்கள். கொல்லு பேரன்கள் கொல்லுப் பேத்திகள் மட்டும் மொத்தம் 11பேர் (பி-9)

## யு.எஸ்.குண்டுவீச்சுக்கு 15 தலிபான்கள் பலி

(காபூல்)

தெற்கு ஆப்கானிஸ்தானில் இருப்பிடங்களின் மீது அமெரிக்க விமானம் குண்டு வீசியதில் தலிபான்கள் என்று சந்தேகிக்கப்படும் 15 பேர் இறந்தனர் என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

காந்தஹார் மாகாணத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் அமெரிக்க இராணுவத்தின் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் இரு தரப்பிலும் காயமில்லை என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (பி-9)

## ஒரே நாளில் 848 நாய்களை குளிப்பாட்டி சாதனை

(சிட்னி)

ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 12 மாணவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 848 நாய்களைக் குளிப்பாட்டி புதிய உலக சாதனை படைத்துள்ளனர்.

ஹாலந்து நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் 715 நாய்களைக் குளிப்பாட்டி ஏற்கெனவே உலக சாதனை படைத்திருந்தனர். இப்போது ஆஸ்திரேலிய பல்கலை மாணவர்கள் அந்த சாதனையை முறியடித்துள்ளனர்.

புதிய உலக சாதனை படைக்க உதவிய நாய்களின் உரிமையாளர்களுக்கு பல்கலைக்கழகத்தின் கால்நடை அறிவியல் மன்றத்தின் இயக்குநர் ஜென்னி சர்ச்சில் நன்றி தெரிவித்துள்ளார்.

உலக தரிசனம்

## பயங்கரவாத சந்தேக நபரை பிடித்து உதவியமைக்காக தாய்லாந்துக்கு 10 மில்லியன் டொலர்

(தைபீ)

தென்கிழக்காசியாவின் மிக முக்கிய பயங்கரவாத சந்தேக நபரான ஹம்பாலியை கைது செய்வதற்கு உதவியமைக்காக 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை சன்மானமாக தமது நாட்டிற்கு அமெரிக்கா வழங்கியுள்ளதாக தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் சின்னவற்றா கூறியுள்ளார்.

இந்தப்பணம் கிடைத்துள்ளதாகவும்இதில் யார்,யாருக்கு பங்கு வழங்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை தனக்கே இருப்பதாக தக்ஷின் கூறியுள்ளார்.

பாதுகாப்பு நிறுவனங்களுக்கு இடையே பிளவை ஏற்படுத்தி விடாதவாறு இந்தப்பணம் பகிர்ந்து அளிக்கப்படுவது கவனத்தில் கொள்ளப்படும் எனவும் அவர்குறிப்பிட்டார்.

இந்தப்பணத்தின் பெரும் பங்கு அமெரிக்காவினால் பெயரிடப்பட்டுள்ள 10 அதிகாரிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் எனவும்,ஏனைய பகுதி ஹம்பாலியைக் கைது செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பொலிஸ் மற்றும் இராணுவப் பிரிவுகளுக்கு வழங்ப்படும் என அவர் கூறியுள்ளார்.

பாலியில் கடந்த வருடம் 202 பெயர் உயிர்களைப் பலிகொண்ட குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக ஹம்பாலி கருதப்படுகின்றார்.

இவர் தாய்லாந்தின் பண்டைய தலைநகரான அயுத்தாயாவில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-9)

## மும்பை குண்டுவெடிப்பு: டுபாயில் ஆசாமி கைது

(மும்பை)

கடந்த மாதம் 25-ம் திகதி மும்பையில் நடைபெற்ற இரட்டைக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் முக்கிய குற்றவாளியான ஜாஹித் பத்னி டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் விரைவில் டுபாயை விட்டு வெளியேற்றப்படுவார் என்று பொலிசார் தெரிவித்தனர்.

ஜாஹித்தை இந்தியாவுக்கு அனுப்பும் முயற்சிகளை டுபாய் நிர்வாகம் ஏற்கெனவே துவங்கி விட்டது.

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கான சதித்திட்டத்தை தீட்டியது, நிதியுதவி அளித்தது ஆகியவை ஜாஹித் மீதான குற்றச்சாட்டுகள்.

ஜாஹித் கைது செய்யப்பட்டதைத் தொடந்து, மும்பை குண்டு வெடிப்புத் தொடர்பாக பல உண்மைகள் தெரியவரும் என்றும் பொலிசார் தெரிவித்தனர். (பி-9)

## செப்டெம்பர் தாக்குதலுக்கும் சதாமுக்கும் தொடர்பில்லை

### அமெரிக்க அதிகாரி கூற்று

(வாஷிங்டன்)

2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்ததாக சதாம் ஹுசைன் மீது புஷ் நிர்வாகம் ஒரு போதும் குற்றஞ்சாட்டியதில்லை என்று அமொிக்கத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீஸா ரைஸ கூறியுள்ளார்.

சதாம் ஹுஷைன் அல்கெய்டாவுடன தொடர்பு வைத்துள்ளார் என்று அமெரிக்கா நீண்ட நாட்களாகக் குற்றம் சாட்டி வந்த போதிலும், கொண்டலீஸா ரைஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தமது பங்கிற்குச் செப்டெம்பர் 11ஆம் திகதி நிகழ்ந்த தாக்குதல்களில் சதாம் ஹுஷைனுக்குப் பங்கு இருந்தது என்று நம்பக் காரணம் இல்லை என்றார்.

இதனுடன் தொடர்புடையதொரு திருப்பமாக ஈராக்கில் ஸ்திரமான ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதில் வெற்றியடைந்தால், இந்தத் தாக்குதல்களுக்கு காரணமான பயங்கரவாதிகளுக்கு அது பேரடியாக அமையும் என்று அமெரிக்கத் துணை அதிபர் பிக்ரெனி கூறியுள்ளார். (பி-9)

## பயங்கரவாத அமைப்பின் 7 மறைவிடங்கள் பிடிபட்டன

காஷ்மீர் மாநிலத்தில் ஜெய்ஷ -இ- முகம்மது பயங்கரவாத அமைப்பின் 7 மறைவிடங்களைப் பாதுகாப்புப் படையினர் செவ்வாய்க்கிழமை கண்டுபிடித்தனர். அங்கிருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களைப் பறிமுதல் செய்தனர்.

ஜெய்ஷ -இ- முகம்மது இயக்கம் பாகிஸ்தானைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

ஸ்ரீநகரில் 2 மறைவிடங்களையும், மாநிலத்தின் இதர பகுதிகளில் 5 மறைவிடங்களையும் பாதுகாப்புப் படையினர் கண்டு பிடித்தனர்.

மாநிலத்தில் பல்வேறு இடங்களில் வன்செயல்களை தூண்டி விட இந்த இயக்கத்தின் பயங்கரவாதிகள் திட்டமிட்டு இருந்தது தெரிய வந்துள்ளது.

தோடா மாவட்டத்தில் பனிஹால் எனுமிடத்தில் குகைக்குள் இருந்த மறைவிடம் கண்டு பிடிக்கப்பட்டது.

மறைவிடங்களைப் பாதுகாப்புப் படையினர் கண்டுபிடிக்கும் முன்னரே அங்கிருந்த பயங்கரவாதிகள் தப்பிவிட்டனர். (பி9)



பாதுகாப்புப் படையினர் செவ்வாய்க்கிழமை 7 பயங்கரவாத அமைப்பின் மறைவிடங்களைக் கண்டுபிடித்தனர். அங்கிருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களை கைப்பற்றினர்

## ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலுக்கெதிரான பலஸ்தீன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது!

### "வீட்டோ"வை பாவிக்க அமெரிக்கா தவறவில்லை

(நியூயோர்க்)

பலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத்தை இஸ்ரேல் வெளியேற்றக்கூடாது என்று பலஸ்தீனத்தினால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் முன்வைக்கப்பட்ட பிரேரணை 11 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும் மத்திய கிழக்கில் இடம் பெற்று வருகின்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சம்பவங்களுக்கு பலஸ்தீனப் போராளிக் குழுக்கள் காரணம் என்பதை ஐ.நா குறிப்பிடத் தவறியுள்ளதால் அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானத்தை ரத்து செய்தது.

ஐ.நா வுக்கான பலஸ்தீன தூதுவா நாஸர் அல்ஹிவ்வா தயாரித்த இந்தப்பிரேரணைக்கு ஐ.நாவின் பாதுகாப்புப்பேரவையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளில் 11 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

இந்தப்பிரேரணைதொடர்பாக பல மணிநேரம் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில், பிரிட்டன்,ஜேர்மனி ,பல்கேரியா ஆகிய 3 நாடுகளும் வாக்களிப்பில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக்கொண் டன.

இதேவேளை,இந்தத்தீர்மானத்திற்கு அமெரிக்கா காட்டி வரும்எதிர்ப்பு அரபாத்தைக் கொலை செய்ய இஸ்ரேலியத் தலைவர்களுக்கு அனுமதி வழங்கு வதை எடுத்துக்காட்டுவதாக பலஸ் தனர்கள் கவலையும்,அச்சமும் தெரிவித்துள்ளார்கள். (பி-9)

## இன்னு ஒரு தகவல்

# ஒப்புரவு

சான்றாண்மைக்குரிய பண்புகளில் ஒன்றாகிய ஒப்புரவு என்பதன் பொருள் என்னவென்றால் கைம்மாறு கருதாமல் பிறருக்கு உதவுதல் இதனைக் "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாறி மாட்டு என்நாற்றும் கொல்லோ உலகு" என்றார் வள்ளுவர். ஓர் ஊரின் கண் உள்ள குளத்து நீர் ஊரார் அனைவருக்கும் உதவுவது போல் பேரறிவாளன் பெற்ற செல்வம் உலகோர்க்கு உதவ வேண்டும்.

ஊரின் நடுவே ஒரு மரம் செழிப்பாக வளர்ந்திருக்கின்றது. அந்த மரத்தில் பூக்கள் மலர்ந்து மணம் வீசிய போது தேனீக்கள் அதில் படிந்து ரீங்காரமிடுகின்றன. சில நாட்களுக்குப்பின் மலர் காயாகிக் கனியாகிப் பழுத்தபோது பறவைகள் இன்னொலி எழுப்பிக்கொண்டு பசியாறிக்கொண்டிருந்தன. அவ்வப்போது அந்த வழியே வந்து போய்க்கொண்டிருந்த மனிதர் சிலர் நிழல் தேடி நின்றனர். சிலர் பழங்களைப் பறித்துப் பசியாறினர். சிலர் மரத்தின் கொழுந்து இலைகளைப் பறித்தனர். பட்டையை உரித்தனர். நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தினர்.

பெரும்புகழ் பெற்ற உஜ்ஜயினி நாட்டைஆண்டவன் விக்கிரமாதித்தன் .அவனது ஒற்றன் ஒருவன் அவனிடத்தில் வந்து சித்திரகூட மலைச்சாரலில் உள்ள தபோவனத்தில் துறவி ஒருவர் வேள்வி செய்வதாகவும் இதைப்பற்றிப் பிறர் அறியவில்லை என்றும் உரைத்தான். அவர் வேள்வி குண்டத்தில் இருந்து அப்புறப்படுத்தும் சாம்பல் மலை போல் குவிந்திருப்பதாகவும்கூறினான்.

விக்கிரமாதித்தன் அங்கு சென்று தேவீயை வணங்கித் துறவியை நோக்கி வேள்வி பற்றித் தான் கேள்விப் பட்டதாகவும் இவர் இவ் வேள்வியை எத்தனை ஆண்டு காலமாகச் செய்து வருகின்றார் என்றும் கேட்டான்.

துறவி தான் நூறு ஆண்டுகளாகஇவ்வேள்வியை ஆற்றுவதாகவும் ஆயினும் இன்னும் தனக்குத் தேவியின் அருள் கிடைக்கவில்லை என்றும் கூறினார். உடனே விக்கிரமாதித்தன் துறவிக்கு தேவியின் அருள் கிடைப்பதற்கு துணை புரிவாதாகக் கூறித் தானும் வேள்விபுரிய ஆரம்பித்தான்.

அவனுக்கும் தேவி தோன்றி அருள் புரியாததன் காரணத்தினால் தனது உடைவாளைக் கொண்டு தனது சிரசை அறுப்பதற்கு முயற்சித்தான்.

அப்போது அவனது முன்னால் தேவி தோன்றினாள். அவள் விரும்பிய வரத்தைக் கேட்கும் படியும் கூறினாள். விக்கிரமாதித்தனும் தேவியிடம் நூறு வருடம் தவம் செய்து வரும் துறவிக்குத் தேவி அருள் புரியாத காரணத்தை வினவினான். தேவியும் காரணத்தைக் கூறினாள். அதாவது, அத் துறவி ஒருமனப்பட்ட நிலையில் வேள்வியைச் செய்யாமல் அலைபாயும் உணர்வுகளோடு இருந்தமையால்த் தான் அருளவில்லை என்று விடை கொடுத்தாள். இதனை அறிந்த விக்கிரமாதித்தன் அந்தத் துறவிக்கு அருள் கிடைக்க வேண்டும் என்பதே தான் விரும்பும் வரம் என்றான்.

அதனைக்கேட்டதேவி "விக்கிரமாதித்தா! நீ மரத்தைப் போன்ற பரோபகாரி. உன்னைச் சேர்ந்தவர்களின் துன்பத்தைப் போக்க நினைத்தாய். எந்த விதப் பிரதிபலனும்

# மனித உரிமைகள் ஆ.கு.வின் முடிவை ஏற்க அகதிக் குடும்பங்கள் மறுப்பு

(திருநெல்வேலி)

மல்லாகம் அகதிமுகாமில் தங்கி வாழும் 65 குடும்பங்களும் அவ் விடத்தை விட்டு வெளியேற மறுபபுத்தெரிவித்துள்ளனர்.

மேற்படி முகாம் அமைந்துள்ள நிலத்தின் உரிமையாளர் தனது நிலத்தைமீளத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரி யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைபாடு செய்திருந்தார்.

இம்முறைப்பாட்டைப் பரிசீலனை செய்த யாழ்.மனித உரிமைகள் ஆணைகுழுவின் அதிகாரி அவர்களைப் பிரதேசசபையின் உதவியுடன் வசாவிளான் பகுதியில் மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்நடவடிக்கை தொடர்பாக அகதி முகாமில் தங்கிவாழும் மக்களுக்குத தெரியப்படுத்திய போது, அவர்கள் வசாவிளான் பகுதிக்குச் செல்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

தமது மறுப்புத் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிக்கு அவர்கள் விளக்கம் அளிக்கையில்,

எம்மை வசாவிளான் பகுதியில் குடியமர்த்துவதால் எமது இயல்பு வாழ்க்கை பாதிப்படையும். ஏனெனில அவ்விடம் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையில் உள்ளது. எனவே, எம்மை வசாவிளான் பகுதியில் குடியமர்த்துவதிலும் பார்க்க எமது சொந்த இடமான மயிலிட்டிப் பகுதியில் குடியமர்த்துவதை நாம் ஏற்றுக் கொள்வோம்.

எம்மை எமது சொந்த இடத்தில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தபின் நாம் தற்போது குடியமர்ந்துள்ள காணியை உரியவரிடம் ஒப்படைக்கலாம்.

இவவாறு அவ் அகதிமுகாமில் வாழும் மக்கள் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியிடம் தெரிவித்துள்ளனர். (உ-43)

# தினமும் புலிக்கொடி ஏற்றுவோம் தடுக்க எவரும் முற்படக்கூடாது

## க.கா.குழுவிடம் பல்கலை ஊழியர் சங்கம் தெரிவிப்பு

(மூளாய்)

திலீபன் நினைவு நாட்களில் யாழ். பல்கலைக்கழகத்தில் தினமும் தமிழர்களின் தேசியக் கொடியான புலிக்கொடி ஏற்றப்படும். இது தொடர்பில் படையினர் சர்ச்சை எதையும் கிளப்பக்கூடாது.

இவ்வாறு,யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்துள்ளது.

தியாகி திலீபனின் 16வது ஆண்டு நினைவு நிகழ்வு யாழ். பல்கலைக் கழகத்தில் ஊழியர் சங்கத் தலைவர் சி. தங்கராசா தலைமையில் இடம்பெற்றவேளை, அவ் வீதி வழியகச் சென்ற இராணுவத்தினர் அங்கு புலிக்கொடி ஏற்றப்பட்டுள்ளமை குறித்து வினவியுள்ளனர்.

இது விடயமாக போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகளிடம் பிரஸ்தாபித்த பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

புலிக்கொடி எமது தேசியக் கொடி அது புலிகளினுடையது மட்டுமன்றி ஒட்டு மொத்தத் தமிழர்களினதும் தேசியத்தினை வெளிப்படுத்தும் கொடி.

இராணுவத்தினர் இது விடயமாக விசாரிப்பது புரிந்துணர்வு ஒப்பந்தமீறல் என்று அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-50)

## இராசி பலன்

**18. 09. 2003**

**(பூரட்டாதி ~01,வியாழன்)**

**சப்தமி- மு.ப- 9.26 வரை**

**ரோகினி - மு.ப.7.05 வரை**

**இராகுகாலம் - 1.33 - 3.03**

**சுபநேரம் - 7.33-9.03**

**மத்தியாஸ்டமி**

**மேடம்**

ரோக நிலை,கௌரவக்குறைவு,போசன சுகக்குறைவு, எந்தக் காரியத்திலும், மந்த நிலை.

**இடபம்**

பெரியோர் மதிப்பு,எண்ணங்கள் நிறைவேறும், தொழில் முயற்சி,நல்ல செய்தி

**மிதுனம்**

சோம்பல் நிலை ,பிறருக்கு உதவுதல், உணர்ச்சிவசப்படுதல், குடும்பக்

## விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்தொன்றில் இருவர் காயமடைந்தனர். வீதியால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளைப் பின்னால் மிக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ் விபத்தின் போது மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த பெண் உட்பட இருவர் காயமடைந்தனர். (ந-5)

# 13 வருடங்களின் பின்னர் மன்னாரில் மீள் குடியமர்வு

(வவுனியா)

மன்னார் கட்டயடம்பனில் 13 வருடங்களின் பின் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக,மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், மன்னார் ஆயர் இராசப்பு ஜோசப்பு, மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் அமுதாப், தள்ளாடி இராணுவத தளபதி ஜெயக்கொடி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை,இப்பகுதியில் 4 இலட்சத்து 32ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (உ-5)

## மாற்றார் வீடுகளில் வசித்து வந்த

# மருதங்கேணி பி.செ. மக்களுக்கு

காரணத்தினால் தனது உடைவாளைக் கொண்டு தனது சிரசை அறுப்பதற்கு முயற்சித்தான்.

அப்போது அவனது முன்னால் தேவி தோன்றினாள். அவள் விரும்பிய வரத்தைக் கேட்கும் படியும் கூறினாள். விக்கிரமாதித்தனும் தேவியிடம் நூறு வருடம் தவம் செய்து வரும் துறவிக்குத் தேவி அருள் புரியாத காரணத்தை வினவினான். தேவியும் காரணத்தைக் கூறினாள். அதாவது, அத் துறவி ஒருமனப்பட்ட நிலையில் வேள்வியைச் செய்யாமல் அலைபாயும் உணர்வுகளோடு இருந்தமையால்த் தான் அருளவில்லை என்று விடை கொடுத்தாள். இதனை அறிந்த விக்கிரமாதித்தன் அந்தத் துறவிக்கு அருள் கிடைக்க வேண்டும் என்பதே தான் விரும்பும் வரம் என்றான்.

அதனைக்கேட்டதேவி "விக்கிரமாதித்தா! நீ மரத்தைப் போன்ற பரோபகாரி. உன்னைச் சேர்ந்தவர்களின் துன்பத்தைப் போக்க நினைத்தாய். எந்த விதப் பிரதிபலனும் நோக்காமல் பெரிய மரங்கள் கடும் வெய்யிலில் நின்ற போதும் பிறருக்கு நிழல் தருகின்றன. பழம் தருகின்றன. மரங்களைப்போன்றவன் நீ" என்று போற்றி அருள் செய்தாள்.

இளையான் குடிப்பதிமாற நாயனார் சைவ சமயத்தைச் சார்ந்த 63 நாயன்மார்களுள் ஒருவர் தம்மிடமிருந்த செல்வம் அனைத்தையுமே ஆண்டவனின் அடியவர்களுக்கு விருந்தோம்பலில் செலவிட்டவர். செல்வம் அனைத்தும் இழந்த நிலையில் சிவனடியார் ஒருவர் தன் வீடு வந்த போது அவரை விருந்தோம்ப வேண்டினார். நேரமோ நள்ளிருள் அடை மழை பொழிகின்றது. இவற்றையெல்லாம் எண்ணிப்பாராமல் நிலத்தில் விதைத்த நெல்லை வாரிக்கொணர்ந்து மனையாளிடம் கொடுத்து அதனை நன்கு நீரில் அலசி சோறாக்கும் படி பணித்தார். அடுப்பெரிக்க விறகில்லை. வீட்டின் உத்தரம் ஒன்றை எடுத்து விறகாக்கினார். விருந்தோம்பினார். ஆண்டவன் அவரது மனம் தளராத பணிகண்டு பரவசமடைந்து அவர்க்கு அருள் செய்து ஆட்கொண்டார்.

ஒப்புரவி னால்வரும் கேடெனில் அஃதொருவன் விற்றுக் கோள் தக்க துடைத்து இது வள்ளுவர் வாக்கு.

*கே.லக்ஷ்மி நாராயணன்*

ரோகினி - மு.ப.7.05 வரை
இராகுகாலம் - 1.33 - 3.03
சுபநேரம் - 7.33-9.03

**மத்தியாஷ்டமி**

**மேடம்**
ரோக நிலை,கௌரவக்குறைவு,போசன சுகக்குறைவு, எந்தக் காரியத்திலும், மந்த நிலை.

**இடபம்**
பெரியோர் மதிப்பு,எண்ணங்கள் நிறைவேறும், தொழில் முயற்சி,நல்ல செய்தி

**மிதுனம்**
சோம்பல் நிலை ,பிறருக்கு உதவுதல், உணர்ச்சிவசப்படுதல், குடும்பக் கவலை.

**கடகம்**
சிநேகிதர் நல்வரவு,போசன நன்மை, புதிய விடயம்,வாக்கு மேன்மை.

**சிங்கம்**
எடுத்த காரியம் கைகூடும், புதிய திருப்பம், மாதர் நட்பு, நல்லசெய்தி.

**கன்னி**
தேசாந்திரவாசம், ச்ரீரப்பிரயாசை, முயற்சிகள் தாமதம், வீண் பயம்.

**துலாம்**
முழங்கால்வியாதி,பொருள் விரயம், வீண் பகை,போசன சுகம்.

**விருச்சிகம்**
பிரயாண நன்மை,செய்தொழில் நன்மை,கௌரவமான நிலை, அதிக வருமானம்.

**தனுசு**
வேலையில் ஆர்வம்,தெளிந்த சிந்தை, உறவினர் சந்திப்பு,உடல் நலம்.

**மகரம்**
புத்திரரால்கவலை, வேலைப்பளு, காரியதாமதம்,பிரயாணம்.

**கும்பம்**
மனச்சஞ்சலம், புதிய விடயம்,மாதா சுகம், சயனசுகக்குறைவு.

**மீனம்**
உற்சாகம், பிரயாண நன்மை, காரிய அனுகூலம், அதிக வருமானம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# 13 வருடங்களின் பின்னர் மன்னாரில் மீள் குடியமர்வு

(வவுனியா)
மன்னார் கட்டயடம்பனில் 13 வருடங்களின் பின் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக,மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், மன்னார் ஆயர் இராசப்பு ஜோசப்பு, மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் அமுதாப், தள்ளாடி இராணுவ தளபதி ஜெயக்கொடி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை,இப்பகுதியில் 4 இலட்சத்து 32ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (உ-5)

## மாற்றார் வீடுகளில் வசித்து வந்த
# மருதங்கேணி பி.செ. மக்களுக்கு துரித வீடமைப்புத் திட்டம்

(மருதங்கேணி)
மருதங்கேணி உதவிஅரசாங்கஅதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து குடத்தனைப் பகுதியில் தனியார் வீடுகளில் தங்கியுள்ள 60 குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் துரிதநடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நாகர்கோயில் மற்றும் அம்பன் பகுதிகளில் இருந்து கடந்தகால யுத்தங்களால் இடம்பெயர்ந்து குடத்தனைப்பகுதியில் உள்ள தனியார் வீடுகளில் தங்கியுள்ள மேற்படி குடும்பங்களைத் தமது வீடுகளிலிருந்து வெளியேறுமாறு வீட்டு உரிமையாளர்கள் நிர்ப்பந்தித்ததையடுத்தே அவர்களுக்கு வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

அதேவேளை, மேற்படி பகுதியில் தங்கியுள்ள 50 குடும்பங்களுக்கும், வன்னியில் இருநது மீளக்குடியேறியுள்ள குடும்பங்களுக்குமே 60 வீடுகளுடன் 8 பொது மலசல கூடங்களும், 5 பொதுக் கிணறுகளும் கட்டிக்கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரான மனு விசாரணை நவம்பரில்

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவைப் பாிசலனைக்கு ஏடுத்துக் கொள்ள மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுவை 3 நீதியரசர்கள் கொண்ட குழு எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம்திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடிவு செய்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி, சிஹல உறுமய,சிங்கள தேசிக சங்கம் ஆகிய கட்சிகளுடன் பொது ஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரட்ணவும் இணைந்து இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,தலைவர் வே. பிரபாகரன் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (தி-61)

# 120 வீடுகள் அமைக்க 5 மில்லியன் கடனுதவி

(மருதங்கேணி)
கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் 120 வீடுகள் கட்டுவதற்கு 5 மில்லியன் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கடன்களை பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் தமது பகுதி பிரதேச செயலர்மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினருடன் தொடர்புகொண்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.(உ-35)

## அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட

# சர்வதேச சக்திகளின் தேவையற்ற தலையீடுகளே பேச்சு முறிவடையக் காரணம்

## இதைக் கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டது

## குற்றம்சாட்டுகிறது தேசிய சமாதானப் பேரவை

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் தன்னைத்தான் சரியான முறையில் தயார்ப்படுத்திக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சை ஆரம்பித்திருந்தால் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்ந்தும் வெற்றிப் பாதையை நோக்கி நகர்ந்திருக்கும்.**

**இவ்வாறு இலங்கை தேசிய சமாதானப் பேரவைப் பணிப் பாளர் எஸ்.பாலகிருஷ்ணன், இலங்கை அரசிற்கும்-தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையில் தாய்லாந்தில் ஆரம் பமான முதல் சுற்றுச் சமாதானப் பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து 6 சுற்றுப் பேச்சுக்கள் நிறைவடைந்த நிலை யில்,கடந்த ஏப்ரல் மாதத்துடன் பேச்சுக்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டமை குறித்து பி.பி.சி. தமிழ்ச்சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துக்கூறுகையில்,

இலங்கை அரசிற்கும்-தமிழீழ விடுதலைப்புலிகளிற்குமிடையில் கடந்த காலப்பகுதியில் நடை பெற்ற பேச்சு வார்த்தைகளில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமானால் பேச்சுவார்த்தை தொடர்ந்தும் நடை பெற்றிருக்கும்.

அத்துடன்,சர்வதேச சக்திகளின் தலையீடு அளவிற்கு அதிகமாகி விட்டது.இதனை மட்டுப்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது. இதுவும் பேச்சு இடை நிறுத்தப்பட்டதிற்கு பிரதானமான காரணமாக இருக்கிறது. குறிப்பாக,அமெரிக்கா,இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிட்டது மட்டுமன்றி, நிபந்தனைகளை விதிக்கின்ற அளவிற்கு வந்துள்ளன.

தமது அதிகாரங்களைக் கூடுதலாகப் பயன்படுத்திவருகின்ற இந் நாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறிக் கொண்டு சமாதானப் பேச்சு வார்த்தையில்,சமாதான நடவடிக்கைகளில் தாக்கங்களை ஏற்படுத்த முயன்று வருகின்றன.

அமெரிக்காவின் ஏற்பாட்டில் நடைபெற்ற வாஷிங்டன் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் அழைக்கப்படாதமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும்தாக்கத்தை ஏறபடுத்தியிருக்கின்றது.

அத்துடன், இத்தகைய சம்பவங்களால் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருக்கின்ற இரு தரப்பினருக்கும் இடையில் பாதுகாக்கப்படும் சமநிலை பாதிக்கப்பட்டுள்ளது. அரசிற்கு இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதேசமயம் பேச்சுவார்த்தையில ஈடுபட்டு வரும் அரசும்-விடுதலைப் புலிகளும் சமபலம் கொண்டவர்களாகக் கணிப்பிடப்பட்டு வருகின்றனர்.

தொலைநோக்கு சிந்தனையற்ற வகையில் அரசு மேற்கொண்ட முடிவுகளும்,சர்வதேச சக்திகளின் தேவையற்ற தலையீடுகளும்,தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவாாத்தை விடயத்தில் ஓர் கடினப் போக்கை கடைப்பிடிக்க இது ஏதுவாக அமைந்திருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் தாமும் சமாதானப்பேச்சுவார்த்தையில் ஒரு தரப்பாகப் பங்கு பற்ற வேண்டும் என தற்போது கோரி வருகின்றமை சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடருவதற்குதடையாக இருக்காது.

இதேநேரத்தில்,இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் பொழுது வட-கிழக்கில் இருக்கின்ற முஸ்லிம்,-சிங்கள மக்களின் பங்கு பற்றுதல்கள்,சமத்துவம் எப்படி உத்தரவாதப்படுத்தப்படவேண்டும்? என்ற விடயம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக நடை பெறும் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட வேண்டியதாக இருக்கும்.இடைக்கால நிர்வாக சபைக் கட்டமைப்புப் பற்றிய வரைபு ஒன்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது பாரிஸில் கூடி தயாரித்துள்ளனர்.இவ்வரைபை இம் மாதம் இறுதிக்குள் அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனை அரசு ஏற்க மறுத்தால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மணடும் குழம்பும் அபாயம் உள்ளது.

விடுதலைப்புலிகளினால் தயாரிக்கப்பட்ட வரைபை அரசு ஏற்றுக்கொண்டு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான இணக்கப்பாட்டிற்கு வந்தால், அதாவது இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பிற்கு அரசு உத்தரவாதம் வழங்குமாக இருந்தால் அடுத்த கட்டம் சமாதானப் பேச்சுவார்த்தை உடனடியாகத் தொடரும் என்றே எல்லோரும் எதிர்பார்க்கின்றோம் என்றார். (உ-62,10)

# விவசாயப் பயிற்சி நிலையத்தில் மாபெரும்விவசாயக் கண்காட்சி

## இன்று முதல் மூன்று தினங்கள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள மாபெரும் விவசாயக் கண்காட்சி இன்று மு.ப.9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு-கிழக்கு பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜா மற்றும் கே.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாளாகிய நாளைய தினம் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். அமிர்தலிங்கமும்,இறுதி நாளான நாளை மறுதினம் விவசாய கால்நடை அபிவிருத்தி காணி நீர்ப்பாசன குற்

# ஜெய்ப்பூர் நிறுவனப் பணிகள் மீண்டும் சுண்டுக்குளியில் ஆரம்பம்

எப்பட்ட முடிவுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமானால் பேச்சுவார்த்தை தொடர்ந்தும் நடைபெற்றிருக்கும்.

அத்துடன்,சர்வதேச சக்திகளின் தலையீடு அளவிற்கு அதிகமாகி விட்டது.இதனை மட்டுப்படுத்த

தலையிட்டது மட்டுமன்றி, நிபந்தனைகளை விதிக்கின்ற அளவிற்கு வந்துள்ளன.

தமது அதிகாரங்களைக் கூடுதலாகப் பயன்படுத்திவருகின்ற இந் நாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவிப்பதாகக்

தமிழீழ விடுதலைப் புலிகள் அழைக்கப்படாதமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும்தாக்கத்தை ஏறபடுத்தியிருக்கின்றது.

அத்துடன், இத்தகைய சம்பவங்களால் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருக்கின்ற இரு தரப்பினருக்கும்

## இன்று முதல் மூன்று தினங்கள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள மாபெரும் விவசாயக் கண்காட்சி இன்று மு.ப.9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு-கிழக்கு பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜா மற்றும் கே.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாளாகிய நாளைய தினம் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். அமிர்தலிங்கமும்,இறுதி நாளான நாளை மறுதினம் விவசாய கால்நடை அபிவிருத்தி காணி நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சின் செயலாளர் ப.இராமநாதனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். யாழ். மாவட்ட விவசாயத்திணைக்கள விரிவாக்கப் பிரிவினால் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் விவசாய ஆராய்ச்சிப் பிரிவுடன் இணைந்து நடாத்தும் இக்கண்காட்சி 21ஆம் நூற்றாண்டுக்குரிய விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் என்ற கருப்பொருளில் 3தினங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சியை மாணவர்கள் பார்வையிட விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ்.உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை அறிவித்துள்ளார். (உ-8)

# ஜெய்ப்பூர் நிறுவனப் பணிகள் மீண்டும் சுண்டுக்குளியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இது வரை இணுவில் மெக்லியோட் மருத்துவமனை வளாகத்தின் ஒரு பகுதியில் செயற்பட்டு வந்த யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் இம்மாத இறுதிமுதல் அதன் பழைய இடமான பழைய பூங்கா வீதி சுண்டுக்குளியில் திருத்து அமைக்கப்பட்ட வேலைத்தளத்திலிருந்து செயற்படும் என் அதன் நிறைவேற்றுப்பணிப்பாளர் திருமதி தி.யோகநாதன் அறிவித்துள்ளார்.

அதேசமயம் இந்நிறுவனத்திற்கு ஆதரவும் பயிற்சித்திட்ட வசதிகளும் அளித்து வந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக் குழுவும் (ஐ.சி ஆர்.சி) இதற்கான தனது ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொண்டு இம்மாதம் 19ஆம்திகதியிலிருந்து அந்தப் பணியில்இருந்து விலகிக் கொள்ளவுள்ளது.

இது தொடர்பாக ஐ.சி.ஆர்.சி நிறுவன யாழ்.பிரிவுத் தலைவர் ஹான்ஸ பீட்டர் ஹெயின்றிச் விடுத்துள்ள பத்திரிகைக்குறிப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

4 ஆண்டுகாலத்தில் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் உற்பத்தி மட்டங்களையும் திறமைகளையும் உயர்த்தும் வகையில் அதன் தொழில் நுட்பவியலாளருக்கு நவீன நுட்பங்களைப் பயிற்றுவித்துள்ளதுடன் உபகரணங்களையும் வழங்கி வந்துள்ளது என்ற வகையில் ஐ.சி.ஆர். சி. உள்ளூர் நுட்பவியலாளர்கள் மூவரை அடிஸ் அபெபாவுக்கு அனுப்பி பயிற்சி பெற உதவியுள்ளது. இந்த நிறுவனம் 800ற்கும்மேற்பட்ட கைகால்களை இழந்தவர்களுக்குச் சேவை புரிந்துள்ளது. மேலும் வன்னியிலிருந்தும் பலர் பயன்பெற்றிருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளது.

ஜெய்ப்பூர் நிறுவனம் மீண்டும் பழைய இடத்தில் செயற்படவிருப்பது தொடர்பாக அந்நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் விடுத்துள்ள குறிப்பில் ஐ.சி.ஆர்.சி நிறுவனத்தின் உதவிகளுக்கும் சேவைகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.



புனரமைக்கப்பட்ட ஜெய்ப்பூர் நிறுவனம்

1987ஆம் ஆண்டிலிருந்து கொழும்பு நடபுறவுச்சங்கத்தின் யாழ். கிளையின் செயற்திட்டமாக இயங்கி வந்த யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக் கால்திட்டம் 2003ஆம் ஆண்டிலிருந்து தாய்ச்சங்கத்தின் நல்லாசிகளுடன் சுயேட்சையும் தனித்துவமுமான ஓர் செயற்திட்டமாக யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் என்ற புதிய பெயருடனும் புதிய இலட்சினையுடனும் வலுவிழந்தோருக்கான செயற்கை அவயவம் பொருத்தல் இயன்மருத்துவம் நவீன தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி ,நடை தாங்கி போன்ற உபகரணஉற்பத்தியிலும் கல்வி மானியம், சுயதொழில் முயற்சி, கடன் போன்றவற்றை வழங்கும் ஓர் சேவை நிறுவனமாக இயங்கி வருகின்றது.

செயற்கைக் கால்களைப் பொருத்துவதற்கு இரு வேறு தொழில் நுட்பங்களை இத்திட்டம் பயன்படுத்தி வருகின்றது.ஒன்று இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டு இலங்கையிலும் பயன்படுத்திய ஜெய்ப்பூர் தொழில் நுட்பம். மற்றையது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பிளாஸ்ரிக் (Polypropylene) தொழில்நுட்பம். 1998ஆம் ஆண்டிலிருந்து ஐ.சி.ஆர். சி. ஓர் ஒப்பந்த அடிப்படையில் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தினருடன் இணைந்து செயற்பட்டு தமது தொழில நுட்பத்தினையும் ஜெய்ப்பூர் தொழில நுட்பவியலாளருக்குப் பயிற்றுவித்தனர்.இம்மாதம் 19ஆம் திகதியில் இருந்து ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி தம் கால் பொருத்தும் பணியிலிருந்து ஐ.சி.ஆர்.சியினர் விலகிக்கொள்கின்றனர்.

உடன்படிக்கை ஒப்பந்தத்தின் பரஸபர நல்லெண்ண சரத்துககளுக்கமைய பல இலட்ச ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்களையும மூலப் பொருட்களையும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கி விட்டு இவர்கள் விலகுவது பாராட்டக்கூடிய செயலாகும்.

ஐ.சி.ஆர்.சி. அறிமுகப்படுத்திய தொழில் நுட்பத்தை முன்னெடுத்துச் செல்லவும் தொழில் நுட்பவியலாளருக்கு மேலும் விரிவான பயிற்சிகளை வெளிநாடுகளில் பெற்றுக் கொடுக்கவும் ஸ்தாபன உள்ளக பயிற்சிகளை வழங்கவும் **Motivation Charitavle Trust, Sri Lanka** என்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது. நிறுவனத்திற்குத் தேவையான நிதியுதவியில்' கணிசமான பங்கினையும மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு நிறுவனத்தின் ஏனைய சேவைகளுக்கான ஆலோசனைகளையும் **Motivation** அமைப்பு இனிவரும் காலங்களில் மேற்கொண்டு உதவும். இதற்கான ஒரு நல்லெண்ண உடன்படிக்கை ஜெய்ப்பூர் நிறுவனத்தினருக்கும் **Motivation** அமைப்புக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (பி)

# விளையாட்டு போட்டி

(காரைநகர்)

ஸ்ரீ சிதம்பரேஸ்வரா சனசமூக நிலைய முன்பள்ளியும், வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளியும் இணைந்து நடாத்தும் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சிவகாமி அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இ. தர்மராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச செயலர் வே. சாம்பசிவம் கலந்து கொள்ளவுள்ளார். (ந-246)

# செய்தித் துளிகள்

## அடிக்கல் நாட்டல்

(மருதங்கேணி)

பளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பகுதி கோயில் வயல் பகுதியில் முன்பள்ளி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வுக்கழகத்தின் பதில் இணைப்பாளர் ரவி தலைமையில் நடைபெற்றது. (உ-35)

## தூதரகம் திறப்பு

(கொழும்பு)

தென்கொரியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தை ஞாயிற்றுக்கிழமையிலும் திறந்துவைக்குமாறு வெளிவிவகாரங்களுக்கான உதவி அமைச்சர் லால் தர்மபிரியஹமகே உத்தியோகத்தர்களைப் பணித்துள்ளார்.

அண்மையில் அந்நாட்டுக்கு விஜயம் செய்த அமைச்சரிடம் அங்கு, வேலை புரியும் சுமார் 6 ஆயிரம் இலங்கையர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (தி-60)

## ஆடு வளர்க்க உதவி

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராம சேவக அலுவலர் பிரிவில், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 12 விதவைகளுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் ஆடு வளர்ப்புக்கு நிதி வழங்கவுள்ளது. (தி-35)

## ஆசிரியர் தொழிற்சங்க சம்மேளனத் தலைவராக மகாசிவம் தெரிவு

(திருநெல்வேலி)

தெற்காசியப் பிராந்திய ஆசிரியர் தொழிற்சங்கச் சம்மேளனத் தலைவராக, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகாசிவம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தெற்காசியப் பிராந்திய ஆசிரியத் தொழிற்சங்கச் சம்மேளன மாநாட்டிலேயே அவர் தெரிவுசெய்யப்பட்டார். (த-43)

## சமுர்த்திவங்கி இடமாற்றம்

(தொல்புரம்)

இதுவரை காலமும் சங்கரத்தைச் சந்திக்கு அண்மையில் இயங்கி வந்த உடுவில் பிரதேச செயலக வலயம் - 2 சமுர்த்திவங்கி தற்போது சுழிபுரம் வலி. மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக இயங்கிவருகின்றது. (உ-70)

## பாலர்பாடசாலையை இயக்கக் கோரிக்கை

(வேலணை)

வேலணைப் பகுதியில், கடந்த கால யுத்த அனர்த்தங்களின் காரணமாக இயங்காதிருக்கும் தென்னிந்தியத் திருச்சபையின் பாலர் பாடசாலை மற்றும் பகல்நேர பாலர் பராமரிப்பு நிலையம் ஆகியவற்றை மீண்டும் இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-47)

## சமுர்த்திவங்கி திறப்பு

(தொல்புரம்)

மூளாய் வீதியில் அமைக்கப்பட்ட வலயம் - 1இற்கான சமுர்த்தி வங்கியை கடந்த 11ஆம் திகதி மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் வைபவரீதியாக திறந்துவைத்தார். (உ-70)

## ஜீ.ரி.சற் ஏற்பாட்டில் 175 வீடமைப்புத் திட்டம்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வெற்றிலைக்கேணி மற்றும் போக்கறுப்புக் கிராம அலுவலர் பிரிவுகளில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 175 வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கவுள்ளது.

இதனடிப்படையில், வெற்றிலைக்கேணியில் 107 வீடுகளும், போக்கறுப்பில் 68 வீடுகளும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. (உ-35)

## கோப்பாய் மாவீரர் துயிலும் இலத்தில் நினைவு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த திங்கட்கிழமை தியாகதீபம் திலீபனின் நினைவுதின நிகழ்வு காலை 9.00 மணிக்குத் தேசியக் கொடி ஏற்றலுடன், ஆரம்பமானது.

தேசியக் கொடியினைப் பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சுதாஸ் ஏற்றினார். ஈகச்சுடரினை வலி. கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் வசந்தி ஏற்றி வைத்தார். தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது.

இதேவேளை, போராளி கண்ணன் தலைமையில் அங்கு நினைவு தின நிகழச்சிகள் இடம்பெற்றன. (த)

## கல்வித் தரம் குறைந்த மாணவர்களுக்கு துரித கற்றல் வகுப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணிக் கோட்டத்தில் உள்ள 10 பாடசாலைகளில் கல்வித் தரம் குறைந்த மாணவர்களுக்கு துரித கற்றல் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

ஜீ.ரி.சற் நிறுவனத்தினரால் 21 ஆசிரியர்களின் துணையுடன், இவ் வகுப்புக்கள் அவ்வப் பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றன. (உ-35)

## அரை நிரந்தர வீடுகள்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள உடுத்துறைக் கிராம சேவக அலுவலர் பிரிவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 120 அரை நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுக்கவுள்ளது. (தி-35)

## அடிக்கல் நாட்டல்

(மருதங்கேணி)

பூநகரி பல்லவராயன் கட்டு சோழநிலாக் கிராமத்தில் புதிய முன்பள்ளிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த வாரம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் ''வேல்ட் விசன்'' நிறுவன உதவியுடன் கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தால் இக் கட்டிடம் அமைக்கப்படவுள்ளது. (உ-35)

## வளர்த்த காளை மார்பில் பாய்ந்தது

(கோப்பாய்)

வீட்டில் வளர்த்த காளை மாடு சீற்றம் கொண்டு முட்டிமோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த சம்பவம் அண்மையில் கோப்பாய் மத்திப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

வழமைபோன்று வீட்டுக்கு அண்மையில் உள்ள தரவையில் மேயக் கட்டிய இள்ங்காளையை அவிழ்த்து வரும் வேளையில், காளை திடீரென சீற்றம் கொண்டு எஜமானை முட்டி மோதியது.

கடும் பிரயத்தனங்களின் பின் மேற்படி குடும்பஸ்தர் காப்பாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-79)

## வாதரவத்தை செல்லும் வீதி புனரமைப்பு

(பருத்தித்துறை)

வீதிகள் அபிவிருத்தித் திணைக்களம் வீரவாணி வாதரவத்தை வீதியை 50 லட்சம் ரூபா செலவில் திருத்திப் புனரமைத்து வருகின்றது. (உ-52)

## நிர்வாகசபை தெரிவு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 5 வருடங்களின் பின்னர் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் புதிய தலைவராக ச.தியாகராசா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 7 பேர் கொண்ட இயக்குநர் சபையும் அமைக்கப்பட்டுள்ளது. (உ-43)

## குளம் புனரமைப்பு

(மருதங்கேணி)

நிக்கொட் திட்டத்தின் கீழ் உடையார் கட்டுக்குளம் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (உ-35)

## மலசலகூடங்கள் அமைப்பு

(சில்லாலை)

ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் வன்னியிலிருந்து வந்து சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியேறிய மக்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இநதவகையில, இம்மாத இறுதிகுள் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு 20 மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வேறுசில தொண்டு நிறுவனங்களும் இத்திட்டத்திற்கு உதவ முன்வந்துள்ளன. (உ-58)

## விளையாட்டுப் போட்டி

(சுண்டுக்குளி)

ஊர்காவற்றுறை, தம்பாட்டி காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம், கடற்றொழிலாளர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து தீவக வலய விடுதலைப் புலிகளின் விளையாட்டு அவையினரின் அனுசரணையுடன் கழக விளையாட்டு மைதானத்தில், விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவுள்ளன.

உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் (ஓவர் கேம்) கரபந்தாட்ட (செற் அப்) ஆகிய விளையாட்டுப் போட்டிகள் இதில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்ள தீவுப்பகுதியில் உள்ள பிரபல்யமான கழகங்கள் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-110)

## தடகளப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த தடகளப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு கலாசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

உடலாளர் மன்றக் காப்பாளர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், போட்டி மேலாளராக கலாசாலையின் அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்த மூர்த்தியும், பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சு.மோகனதாசும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

## கௌரவிப்பு

(மருதங்கேணி)

பருத்தித்துறை வியாபாரிமூலை இன்பசிட்டி சித்திவிநாயகர் தேவஸ்தானததின் வருடாந்த உற்சவ காலங்களில் மூன்று வருடங்களாகத் தொடர் சொற்பொழிவாற்றிய கார்த்திகேசு கமலநாதனுக்கு ''சித்தாந்த வித்தகர்'' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (உ-35)

## பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடாத்தப்பட்டு வரும் பண்ணிசை, யோகாசன - தியான வகுப்புக்களின் புதிய பிரிவுகள் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இவ்வகுப்பில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்களை சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## சிறப்பு மருத்துவ முகாம்

(மருதங்கேணி)

மாங்குளம் பகுதியில் தியாக தீபம் திலீபன் நடமாடும் மருத்துவ சேவையினரால் சிறப்பு மருத்துவ முகாம் அண்மையில் நடாத்தப்பட்டது.

கடந்த 13ஆம் திகதி மாங்குளம் பகுதியில் நடைபெற்ற இம்முகாமில் கண்சிகிச்சை, பற்சிகிச்சை இரத்தப் பரிசோதனை, குழந்தை மருத்துவம், பொது மருத்துவம் என்பன மேற்கொள்ளப்பட்டன.

இநத நடமாடும் மருத்துவ சேவையில் 269 பேருக்கு சிகிச்சையளிக் கப்பட்டது. (உ-35)

# அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி குறித்து அதிருப்தி

(பருத்தித்துறை)

தற்போது அரசால் உருவாக்கப்பட்டுள்ள அபிவிருத்து உத்தியோகத்தர் சேவையிலிருந்து தம்மை நீக்கி தமது தனித்துவத்தைத் தொடர்ந்தும் பேண நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண உளளூராட்சி ஆணையாளர் திருமதி ரீ. விஜயலட்சுமியை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் அதன் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் திருகோணமலை சென்று உளளூராட்சி ஆணையாளரைச் சந்தித்து இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அக்கோரிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

★ வருடாந்தம் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு வருககும் போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்து, சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் எம்மைப் பங்குகொள்ளச் செய்யவேண்டும்.

★ இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் தோற்றுவதற்கு எமக்கும் வாய்பளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

★ சேவைத்தரத்தில் விசேட தரம் ஒன்றை உருவாக்கி புதிய சம்பள படிநிலையில் வைக்கப்படவேண்டும்.

★ சமூகசேவை உத்தியோகத்தர்கள், உளளூ ராட்சி மன்றங்களின் விசேட ஆணையாளர்களாக நியமிக்கப்படவேண்டும். (உ-52)

# விஞ்ஞானச்சங்க ஏற்பாட்டில் இளம் கண்டுபிடிப்பாளர் விருது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞானப்பிரிவு, உயர்தர விஞ்ஞானப்பிரிவு மாணவர்களிடையே இவ்வாண்டுக்கான இளம் கண்டுபிடிப்பாளர் விருதுக்கான போடடியை நடாத்தவுள்ளது.

அதற்கு முன்னர் இப்போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்களுக்கு விசேட கலந்துரையாடலகளை நடத்தவும் இச்சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த அடிப்படையில் வடமராட்சி வலய விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு நேற்று மு.ப. 9.00 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும்,

தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு நண்பகல் 12 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் தீவகம், வலிகாமம ஆகிய வலயப் பாடசாலை மாணவர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் பௌதீகவியல் துறை மண்டபத்திலும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. (உ-10)

# கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த) மாதிரிப் பரீட்சை — 2003

## பாடம் :-கணிதம்-II (விடைகள்)

1) (அ) I) இரண்டு
II) $256cm^2$
III) $256cm^3$
IV) 12cm

(ஆ) I) (x-3) (x+3)
II) $x^2 + 2x - 15$
III) $\frac{x+3}{x+5}$

(இ) I) $30^o$
II) $100^o$
III) 5.6cm

(ஈ) I) 0.08, 0.4, 0.5, 0.56
II) முதன்மையெண்
III) 128
IV) 5

உ) I) $212^oF$
II) $0^oC$
III) -40

ஊ) I) 70 பேர்
II) x<1
III) $330^o$
IV) $85^o$

2) I) 7.4m
II) $3.64m^2$
III) $74m^2$
IV) $36.4m^3$

3) அ) I) 110
II) 51ஆவது
III) 240
IV) 20

ஆ) I) 2அல்லது -3
II) 56 அல்லது -189

4) I) (x+5) (6x+1)
II) 25
III) oஅல்லது 3
அல்லது -3
IV) (-6, -11)

5) I) x=2y
1.3335 (100-y) = x
II) x=80 y=40

6) --------

7) அ) I) 3
II) 2
ஆ) 0.024

8) I) ரூ. 500
II) 210
III) ரூ. 3150
IV) ரூ. 657.5

9) அ) I) $50^o$, $56^o$, $74^o$
II) $16^o$, $16^o$, $148^o$
ஆ) ----------

10) அ) I) $\frac{25}{50}$
II) $\frac{15}{50}$
III) $\frac{10}{50}$

ஆ) I) $\frac{1}{4}$
II) $\frac{3}{4}$
III) $\frac{1}{5}$

# நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி

# இந்த நாடே இருக்குது தம்பி

**''கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே''**

ஆன்றோர்வாக்கு இது. அதன்படி ஒழுகின்றோமா? என்று எண்ணிப் பார்த்தால் ஏமாற்றம் தான் விஞ்சுகின்றது.

**ஓடடா நாயே என்று துரத்துபவர்கள் ஒரு கணம் நின்று ஏனிந்த நிலை என்று எண்ணுவார்களா?**

பட்டம், பதவி என்று புத்தகக் கட்டுக்களோடு பலரும் உலாவருகின்ற இந்த நாளையிலே, துள்ளித் திரிகின்ற பள்ளிப் பருவத்தில் மற்றோர் எள்ளி நகையாடும் வகையில் இரந்து வாழ்கின்ற எமது சிறார்கள் பறறியும், நாம் சற்றுச் சிந்தித்தேயாகவேண்டும்.

ஒரு நேரச் சோற்றுக்காக எதிர்கால வாழ்வைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணாது வீதிகளில் கையேந்தி நிற்கின்ற எம்மினச் சிறுவர்களின் எதிர்காலம் என்ன?

''ஐயா! தர்மம், அம்மா பிச்சை'' என்று இரந்து நிற்கின்ற இவர்களை இந்த நிலைக்குத் தள்ளியது எது? மழலை மொழி பேசும் வயதில், ''மலிவு மலிவு'' என்று கூவி அழைத்திட இவர்களைத் தூண்டியது எது?

இரணடுதசாப்தகால யுத்தத்தின் மாறாத வடுக்களில் இதுவும் ஒன்று எனக் கூறுவதுடன், வீணே இருந்து விடாது, இதிலிருந்து மீளும் வழி பற்றிச் சிந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.

பிச்சைக்காரர்கள் என நெஞ்சில் ஈரமின்றி நாம் அழைக்கின்ற இந்தச் சிறுவர்களின் இரங்கல் குரல்களுக்கு இரக்கம் காட்டாத அரக்ககுணம் படைத்தவர்களையும் நாம் ஒருங்கே பார்க்க முடிகின்றது.

''ஓடடா நாயே'' என்று இவர்களை எட்டி உதைப்பதில் எம்மவர்கள் காட்டுகின்ற ஆர்வத்தையும், அவசரத்தையும் இவர்களை இந்த நிலையில் இருந்து மீட்டெடுக்க முடியாதா? என்று எண்ணிப்பார்ப்பதில் காட்டினால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

இநதப் பிஞ்சுக் கரங்களைப் பிடித்து நல்ல பாதையைக்காட்ட பரந்த இந்தப் பூவுலகில் எவருமே இல்லையா?



ஏட்டில் மட்டுமா எம் உரிமைகள்
நாட்டில் நாம்படும் பாட்டை யார் அறிவார்?

**தண்ணியில்லா மீனைப்போல கண்ணீரில் நாங்கள் வாழ எங்களை ஏன் படைத்தாயோ? இறைவா!**

கடந்த 20 வருடப் போர் பல்லாயிரக்கணக்கான சிறுவர்களை ஏதிலிகளாக, ஏதுமற்றவர்களாக்கியுள்ளதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இந்த நிலைப்பாடுதான் பாடப் புத்தகங்களைத் தூக்கவேண்டிய இவர்களைக் குடும்பப்பாரத்தைத் தூக்கவைக்கிறது.


அம்மா பசிக்குதே! தாயே பசிக்குதே!!

குடும்பத்தலைவனை இழந்த குடும்பத்தில் இருந்தோ அல்லது போனால் ஊனமுற்றவர்களின் குடும்பத்தில் இருந்தோதான் இந்த இரந்து வாழும் சிறுவர்கள் முளைக்கிறார்கள் என்பதை அவர்களோடு பேசிப்பார்த்தால் புரிந்துகொள்ளலாம்.

களளம் கபடமற்ற இந்த வெள்ளை உள்ளங்களை நாட்டுப்பிரச்சினை பிச்சையெடுக்கத் தூண்டியிருக்கின்றது என்பதுதான் யதார்த்தம்.

இதை விடவும் உழைத்து வாழ்வதை விரும்பாது சும்மா இருப்பதிற் சுகம் காண்கின்ற அறியாத் தனம் மிகுந்த சிலர் தம்மைப் போல் தம் பிள்ளைகளையும் பிச்சையெடுக்கக் கூட்டிச் செல்கின்ற சம்பவங்களும் நிகழாமல் இல்லை.

**பாடப்புத்தகங்களைச் சுமக்கவேண்டிய இவர்களை, குடும்பப் பாரத்தைச் சுமக்க வைத்தது எது?**

இப்படியான சிறார்களை தமது சுய இலாபங்களுக்காக தவறான வழிகளில் பயன்படுத்துகின்ற பண முதலைகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.


பள்ளிசெல்லும் பிஞ்சிதற்கு பழக்கடையே தஞ்சமாச்சு

இரும்புக் கடைகளில் துரும்பாய் மதிக்கப்படுகின்ற சம்பவங்களும், வீட்டுவேலை என்று சொல்லி எசமான்களால் கொடூரமான முறையில் துன்புறுத்தப்படுகின்ற சம்பவங்களும் இதனை ஊர்ஜிதம் செய்கின்றன.

சக வயதுடையவர்கள் சந்தோசமாகப் பள்ளி செல்லும் போதும், பெற்றோரின் கைப்பிடித்து உற்சாகமாக நடந்து செல்லும் போதும், பட்டாடையுடுத்தி சிட்டுக்களாய்ப் பறக்கும்போதும் இந்தச் சின்னஞ் சிறுவர்களின் மனம் என்ன பாடுபடும் என்பதை எவராவது சிந்தித்துப் பார்ப்பதுண்டா?

''தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்''

என்ற பாரதியின் முழக்கம் பொய்யாயப் பழங்கதையாய்ப் போனதுவோ?

''இனி ஒரு விதி செய்வோம்

**செய்திக் கட்டுரை**

இதை எந்த நாளும் காப்போம்''

ஆம்! இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவதாயின் முதலில் மக்களின் மனங்களைச் சலவை செய்வது அவசியம்.

**எல்லோரும் இந்த நாட்டு மன்னர்**

இந்த மனப்பாங்கு என்றைக்கு எல்லோருடைய மனங்களிலும் புகுகின்றதோ. அன்றைக்கு இந்த நிலை மாறும்.

ஏழை - பணக்காரன், மேலோன் - கீழோன், மேல்ஜாதி - கீழ்ஜாதி இந்தப் பாகுபாடெல்லாம் மறந்து சரிநிகர் சன்மானம் என்ற மந்திரம் என்று ஒலிக்கின்றதோ, அன்று இந்த நிலை மாறும்.

**க.பவன்**

நான் என்ற அகங்காரத்தை விட்டு, நாம் என்று, என்று சிந்திக்கின்றோமோ அன்று இந்தநிலை மாறும்.

''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' கனியன் பூங்குன்றனாரின் இந்த வார்த்தையை அர்த்தமுடைய தாக்குவோம் வாரீர்! □

# கட்சியின் பிளவைப் பயன்படுத்தி முஸ்லிம்களை ஒடுக்க முனைகின்றனர்

## பிரதியமைச்சர் வஸீர் சேகுதாவ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்தை அங்கீகரித்து, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைக்க விரும்பும் எந்தவொரு தரப்பும், முஸ்லிம் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் சக்தியுடன் தான் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், வீடமைப்புப் பிரதி அமைச்சருமான வஸீர் சேகுதாவ் ஏறாவூரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், முஸ்லிம் சமூகத்தை அங்கீகரிப்பதாகக் கூறிக்கொண்டு சிவில் அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது, முஸ்லிம் மக்களின் அரசியல் அடையாளத்தை அழிப்பதற்கான முயற்சியாகவே கருதப்படும்.


தற்போது கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் மக்கள் இடையே நிலவும் பிரச்சினைகளை இவ்விரு சமூகங்களினதும் அரசியல் சக்திகளின பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க முடியும்.

இதேவேளை, முஸ்லிம் சமூகத்தின் சார்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் தற்போது பொருட்படுத்தப்படாமைக்குப் பேரினவாதிகளோ அன்றி தமிழீழ விடுதலைப் புலிகளோ காரணமல்ல.

இதற்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிளவே காரணம்.

இப்பிளவை தற்போதைய அரசியல் வாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, முஸ்லிம் மக்களை ஒடுக்க முனைகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-61)


யாழ். கூட்டுறவுச் சபையால் கடந்த 6 மாதமாக நடத்தப்பட்டு வந்த கணனிக் கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களில் ஒருவர், நேற்று சபையின் மண்டபத்தில் நடைபெற்ற கற்கைநிறைவு வைபவத்தில் சபையின் செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியத்திற்கு நன்றிப் பரிசினை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்:- க.பவன்)

*அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய வல்லார் நட்பு ஆய்ந்து கொளல்.*
—குறள்

## வலம்புரி

### எதிர்பார்ப்பில் தோல்வி

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்றதும் நாட்டில் சமாதானம் ஏற்பட்டு விடும், இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி இயல்பு வாழ்வை அனுபவிக்கலாம் எனப்பலவாறு எதிர்பார்க்கப்பட்டது. அந்த எதிர்பார்ப்புக்கு அமைவாக, அரசும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்தம் ஏற்பட்டு ஆறு மாதங்களில் வடக்குக் கிழக்கில் இயல்பு நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு பதினெட்டு மாதங்கள் கடந்த நிலையிலும், இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை.

மாறாக, தமிழர்களின் குடியிருப்புப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இடம பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழ்கின்ற அவலநிலை இன்னமும் அகலவில்லை. இந நிலையில், சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது. எனினும் ஆறு சுற்றுப் பேச்சுக்களோடு சமாதானச் சுருதி முடங்கிப் போயுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட அரசாங்கம், தமிழர் தாயகப் பகுதியில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதாக உறுதியளித்திருந்த போதிலும், அது விடயத்தில் அரசின் வேகம் மந்தமடைந்து போனமை சமாதானத்தின்பால் அரசு காட்டும் அக்கறை திருப்தியாக இல்லை என்பதையே வெளிக்காட்டுகிறது.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியான போதிலும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லையென விடுதலைப் புலிகளின் அரசியலத்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஜப்பான் தூதுவர் யசூஷி அகாஷியிடம் தெரிவித்திருந்தமையும் இங்கு நோக்குதற்குரியது.

அதாவது, சமாதானத்தின்பால் நம்பிக்கை கொண்டு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து வருபவர்கள விடுதலைப் புலிகள். அவர்கள் சமாதானத்தின் மீது நம்பிக்கை யீனமடைவார்களாயின் அது மீண்டும் யுத்தத்துக்கே வழி வகுக்கும்.

எனவே, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் சமாதானத்தின்பால் நம்பிக்கை கொண்டு முன் வரும் போது அதனை நல்ல முறையில் கையாள்வது அரசின் தலையாய கடமையாகும். அதனை விடுத்து சமாதான முயற்சிகளைக் காலங்கடத்துவதோ அன்றி இராணுவத்தின் ஆலோசனையின்படி நடந்து கொள்வதோ நிரந்தர சமாதானத்தை அடைவதற்கான வழியாகாது.

ஐ.தே.முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த போது சமாதானம கிடைக்கும்-இயல்பு வாழ்க்கை ஏற்படுமென எதிர்பார்த்த தமிழ் மக்கள் ஏமாந்து போயினும் அந்த ஏமாற்றத்திற்குப் பரிகாரம் காண அரசு முயற்சிக்க வேண்டும்.

# புரிந்துணர்வு உடன்படிக்கை விதிகளுக்கு

# இருதரப்பினரும் கட்டுப்படுவது அவசியம்

## அமெ. இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

இரு தரப்பினராலும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கும், இவ்விடயத்தில் நோர்வே அரசாங்கம் ஆற்றி வரும் பங்களிப்பிற்கும் தனது முழு ஆதரவை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படடு, நேற்று முன்தினத்துடன் ஒரு வருடம் பூர்த்தியானதைத் தொடர்ந்து, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், கடந்த 20 வருடங்களாக இடம்பெற்று வந்த உளளூர் யுத்தத்திற்கு முடிவு காணும நோக்குடன் இரு தரப்பினராலும் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் வரவேற்கத்தக்கன.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியான நிலையில், தற்போது அது தடைப்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

யுததநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சமாதானச் சூழல் நிலவும் சூழ்நிலையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலைகள் தொடர்பாக அமெரிக்கா கவலைகொண்டுள்ளது.

யுத்த உடன்படிக்கையில் அரசியல் படுகொலைகள் உட்பட பயங்கரவாதச் செயல்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க இரு தரப்பினரும் கட்டுப்படுவதுடன், அவ்விதிகளுக்கு ஏற்றவாறும் நடந்துகொள்ள வேண்டும்.

கடந்த யூலை மாதம் 17ஆம் திகதி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை யோசனைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் வழங்கப்படும் பதில் அர்த்த புஷ்டியானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இப பதில் மூலம் இரு தரப்பினரும் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வாய்ப்புகளும் உண்டு.

இப்பேச்சுவார்த்தைகளை முன்னிட்டு காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும், விட்டுக்கொடுப்புகளுடன் இணங்குவதன் மூலமும், இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வு கிடைக்க வாய்ப்புண்டு என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## பரு.பிரதேச செயலகத்தில்

## முதியோர், சிறுவர் தின விழா

(பருத்தித்துறை)

பருததித்துறை பிரதேச செயலக முதியோர், சிறுவர் தின விழா எதிர் வரும் முதலாம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஏ.சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிலே, யாழ்.பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜ சுந்தரம் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறைக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், பருத்தித்துறை லயன்ஸ் கழகத் தலைவர் பி.கதிரமலை, இளைப்பாறிய சமூகசேவை உத்தியோகத்தர் எம்.தர்மலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இத்தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரைப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்குதல, முதியோரைக் கௌரவித்து அன்பளிப்புகள் வழங்குதல் என்பனவும் அன்றையதினம் நடைபெறவுள்ளன. (உ-52)

## புலிகளின் பகுதியில் உள்ள

## பத்துப் பாடசாலைகளுக்கு

## மலசலகூட வசதி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள 10 பாடசாலைகளுக்கு ஜீ.ரி.சற் நிறுவனம் மலசலகூட வசதிகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

மேற்படி பகுதிகளிலுள்ள மாமுனை அ.த.க. பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, செம்பியன்பற்று றோ.க. பாடசாலை, தாளையடி றோ.க. பாடசாலை, மருதங்கேணி இ.த.க. பாடசாலை, உடுத்துறை மகாவிததியாலயம், ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை மற்றும் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை, கேவில் அ.த.க. பாடசாலை ஆகியவற்றிற்கே மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

(உ-43)

# சொந்த இனத்தை ஈடேற்றுவது என்ற இலக்கை

# மறந்து தமிழ்க்கட்சிகள் செயற்படுகின்றன

## மாவை சேனாதிராஜா எம்.பி. மனக்கவலை

யாழ்ப்பாணம்)

தமிழர்களின் அடிமைத் தழை அறுக்க அன்று உருவாக்கப்பட்ட தமிழ்க்கட்சிகள் இன்று சுயாட்சி, மண்பற்று, தேசியம், சுதந்திரம் என்பவற்றை மறந்து சுயலாப நோக்குடன் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றமை குறித்து கவலைப் படாமல் இருக்கமுடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா. தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ்.பணிமனையில் நேற்று இடம்பெற்ற கோப்பாய்த் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கோப்பாய் கோமகன் அமரர் கு.வன்னிய சிங்கத்தின் 44வது நினைவுதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு நினைவுரையாற்றியபோது மாவை இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மூத்த உறுப்பினர் ஆவரங்கால் சின்னத்துரை தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மாவை எம்.பி.தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சுயலாபம் கருதிய தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக நாட்டிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் சிதறுண்டு, ஆளுக்கு ஒரு பக்கத்தில் நிற்கின்றன.

ஒரு இனத்தை அல்லது சமூகத்தை வழிப்படுத்துவதற்கும், ஈடேற்றுவதற்குமாக உருவாக்கப்படுகின்றவைதான அரசியல் கட்சிகள். இந்த இலக்கை தமிழ்க்கட்சிகள் மறந்து செயற்படுகின்றன.

இக்காரணங்களால் கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகளும், உட்பூசல்களும் வலுப்பெற்று விடுதலை என்ற இலட்சியம் வெகுதூரம் போய் விடும் நிலை ஏற்பட்டுள்ளது.

கட்சிகளில் உள்ள குறைபாடுகளைக் களைந்து, வகுத்துக் கொண்ட இலட்சியத்திற்காக கட்சிகளை சீர்திருத்தம் செய்து மாற்றங்களை உருவாக்குதுடன், தேசியம் என்பதை நிலைநிறுத்தும் மண் மீட்பை விரும்புபவர்களை ஒன்றிணைத்து செயற்படுதல் வேண்டும்.

தமிழரின் தேசியம், சுய நிர்ணயம், மரபுவழித் தாயகம் என்பனவற்றை உலகறியச்செய்து வரும் இவ்வேளையில், இதன் உண்மை நிலையைக் கண்டறிய வெளிநாடுகளின பிரதிநிதிகள் அடிக்கடி இங்கு வருகின்றனர்.

இந்த வேளையில் நாம் பிளவுபட்டு நிற்பது பெருந்துரோகம்.

விடுதலைக்காக தூரநோக்குடனும் விழிப்புடனும் நாம் நடந்து கொள்ளவேண்டிய தருணம் இது.

எமது தாயகப் பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ள அந்நியப்படையை அகற்றுவதற்கு போர்க்கொடி ஏற்றி எதிர்ப்புத்தெரிவிக்க நாம் தயாராக வேண்டும் என்றார்.

(உ-04)

## போக்குவரத்து நெருக்கடிக்கு

## முடிவுகட்ட பெருமுயற்சி

(கொழும்பு)

கொழும்பு நகரில் இதுவரை காலமும் இருந்துவந்த போக்குவரத்து நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவரும் வகையில், 170கோடி ரூபா செலவில் வளைய வடிமாக கொழும்பு நகரைச்சுற்றி நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது.

வீதி அபிவிருத்திச்சபை மேற்கொள்ளும் இந்தத்திட்ட, நிர்மாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேல்மாகாணத்தில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலை குறைத்துக்கொள்வதும் கொழும்பில் குடிசனம் நெருக்கமான பகுதிகளுக்கு அப்பால் அபிவிருத்தியை ஊக்கப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு நாட்டின் சகல பிரதேசங்களிலிருந்து செல்வதும் இதன் மூலம் இலகுவாக்கப்படும்.

இத்திட்டத்தின்படி, கரவெலப்பிட்டியவையும் கட்டுநாயக்கா நெடுஞ்சாலையையும் இணைக்கும் கடவத்த, கடுவெல பிரதேசங்களுடாக 4வாகனங்கள் ஒன்றாகச் சேர்ந்து பயணம் செய்யக்கூடியதாக இந் நெடுஞ்சாலை அமையவுள்ளது.

இந் நெடுஞ்சாலையில் தேவையான இடங்களில் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன், வடக்கிற்கும், தெற்கிக்கும் இடையிலான போக்குவரத்து கொழும்பு நகரின் நெருக்கமான பாதைகளை தவிர்த்து இடம்பெறக்கூடியதாக அமைக்கப்படவிருப்பதும் குறிப்பிடத் தக்கது. (உ-06)




சாயி அருளமுதம்

**சத்யம்**

சத்யம் எனப்படுவது எல்லோராலும் எவ்விதமான சூழ்நிலையின் மத்தியிலும் மதிக்கப்படவேண்டியதொன்றாகும். வாக்குவாதங்களினாலோ, விமர்சனங்களினாலோ அல்லது பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதினாலோ சத்தியத்தை மாற்ற முடியாது. அதுபோலவே வேதாந்தத்தில் கூறப்பட்டுள்ள சதாகால உண்மைகளும் எந்தவொரு குறிப்பிட்ட சமயத்திற்கோ, பிரிவினருக்கோ, சமூகத்திற்கோ உரியவை போலல்லாது தம்மை வெளிக்காட்டுகின்றன.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை


## வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 24ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

எதிர்வரும் மாதம் 8,9ஆம் திகதிகளில் ஆலயத் தேர், தீர்த்த உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.(உ-52)

# ஐ.நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை

## ஜனாதிபதி கோபி அனானுக்கு கடிதம்

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலைகள் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெறவுள்ள கூட்டங்களில் தான் கலந்து கொள்ள முடியாதிருப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக, இந்தக் கூட்டத் தொடரில் தான் கலந்து கொள்ள உள்ளதாக அறிவித்திருந்த ஜனாதிபதி, தற்போது நாட்டுச் சூழ்நிலைகளைக் காரணங்காட்டி கூட்டங்களில் தன்னால் கலந்து கொள்ள முடியாதிருப்பதாக தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தால் கடந்த ஜுலை மாதம் 23 ஆம் திகதி தனக்கு அனுப்பிவைக்கப்பட்ட அழைப்புக் கடிதம் தமக்கு இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, ஜுலை மாதம் 7 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதமும், தனக்கு ஜுலை மாதம் 12 ஆம் திகதியே வெளிவிவகார அமைச்சர், மற்றும் ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மூலமாகக் கிடைக்கப்பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இந்தக் கூட்டத்தில் தன்னால் கலந்து கொள்வது இயலாத காரியமாக உள்ளதெனவும், இதற்காக தாம் மிகவும் மன வருத்தம் அடைவதாகவும் ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெறவுள்ள பொதுச் சபைக் கூட்டம் மற்றும் எயிட்ஸ் தொடர்பான மாநாட்டில் இலங்கை சார்பாக யார் கலந்துகொள்வது என்கின்ற சர்ச்சை அண்மைக் காலங்களாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-5)

# தெல்லிப்பழையில் ஊழியர் மீது படையினர் கெடுபிடி

(திருநெல்வேலி)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பணியாளர்கள் மீது படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதாக, வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இப பணிமனை அமைந்துள்ளதால் அங்கு கடமைக்குச் செல்லும் பணியாளர்கள் மீது படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதால் குறிப்பிட்ட நேரத்திற்கு கடமைக்குச் செல்ல முடிவதில்லை என பணியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடமைக்குச் செல்லும் பணியாளர்கள் பல்வேறு நிபந்தனைகளுடனேயே பணிமனைக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். கடமைக்குச் செல்வோர் எக்காரணம் கொண்டும் மாலை நேரத்தைத் தவிர வேறு நேரங்களில் திரும்புவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் வெளிக்களவேலைகள் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இவ்வாறான நடைமுறைகள் விதிக்கப்படுவதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

படையினரின் கெடுபிடி காரணமாக சுகாதாரப் பணிமனையில் வேலை செய்ய முடியாமல் இருப்பதாகத் தெரிவித்து பணியாளர்கள் இடமாற்றம் பெற்றுத்தருமாறு கோருவதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-5-43)

## முன்னாள் கல்வி.. ..

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்குடன், தனது கட்சியைப் பலப்படுத்தும் முயற்சிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீவிரமாக முயன்று வரும் வேளையில், ரிச்சர்ட் பத்திரனவின் இந்த முடிவு கட்சிக்கு பாரிய பின்னடைவுகளைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னைய ஆட்சியில் கல்வியமைச்சராகவிருந்த ரிச்சர்ட் பத்திரன 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியைத் தழுவிக் கொண்டார். அதன்பின்னர், அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளலாம் என்ற பேச்சுக்கள் அடிபட்டு வந்தபோதிலும், தற்போது இது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவரைத் தவிரவும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மேலும் பலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள ஆவலாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## முஸ்லிம்....

குறித்து ஒன்றியம் ஆராயும்.

பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்வது தாமதிக்கப்படாமல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கான முழுப்பொறுப்பையும் சமரச ஏற்பாட்டாளர்களான நோர்வே அரசே ஏற்க வேண்டும் என்று தாம் வலியுறுத்தியதாக தெரிவித்த ஹிஸ்புல்லா, முஸ்லிம்களின் தனித்தரப்பு விடயம் குறித்து விடுதலைப் புலிகளுக்கு நோர்வேத் தரப்பினரே விளக்க வேண்டுமென்று வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் நோர்வேத் தரப்பினரை கேட்டுக் கொண்டதாகத் தெரிவித்தார்.(இ)

## தமிழ் அரசியல்....

தமது அரசியல் எதிரிகளை புலிகள் படுகொலை செய்துவருவதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார். இதனடிப்படையில் ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகிய அமைப்புக்களின் உறுப்பினர்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலைமையை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தனக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

(ந-5)

## பாதுகாப்பு....

மணியந்தோட்டம், அரியாலை, சீநோர், யாழ்.கோட்டை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, தொண்டமனாறு, சுப்பர் மடம், இன்பருட்டி, பொலிகண்டி, அம்பன், குடத்தனை ஆகிய பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்தல் மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்களிலுள்ள வழிபாட்டுத் தலங்களை வழிபட அனுமதித்தல் உட்பட ஏனைய உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இம் மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

இன்று மாலை 3 மணிக்கு பாதுகாப்பு அமைச்சில் இடம் பெறும் இம் மாநாட்டில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, மேலதிக செயலாளர் கே.டபிள்யூ.ஈ.கரலியத்த, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி தயாசந்தகிரி, யாழ்.கூட்டுப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, காரைநகர் கடற்படைத் தளபதி பேஸ் கொமாண்டஸ், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் குடாநாட்டிலுள்ள அனைத்துப் பிரதேச செயலர்களும் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த)

# கடற்பரப்பில் படையினர் பயிற்சி தொழில் செய்ய மீனவர் அச்சம்

(திருநெல்லேலி)

கடற்பகுதியிலும் கரையோரங்களிலும் படையினர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதால் தமது தொழில் பாதிக்கப்பட்டு வருவதாகக் கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சியில் கச்சாய் தம்ப தோட்டத்தில் அமைந்துள்ள இராணுவத்தினர் பயிற்சிகளில் ஈடுபடுவதால் அதனை அண்டிய பகுதிகளில் கடற்றொழில் முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

கச்சாய் முதல் தனங்களப்பு வரையிலான பகுதியில் படையினர் கடற்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதுடன் கடற்பரப்பில் சிவப்புக் கொடிகளையும் நாட்டியுள்ளனர்.

இதனால் அப் பகுதிக்குச் சென்று தொழிலில் ஈடுபட மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக யாழ். குடாநாட்டில் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக கடற்றொழிலாளர் சங்கச் சமாசம் தெரிவித்துள்ளது.

வடமராட்சி வடக்கில் உள்ள தொண்டமானாறு, வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கடற்படையினரின் அதிவேகப் படகுகளின் தீவிர ரோந்து நடவடிக்கையினாலும் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ந-43)

## ஆட்டோ மோதி பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிலிருந்து தனது உறவினர்களைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த பெண் ஒருவரை ஆட்டோவொன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் யாழ். வைத்தீஸ்வராச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த பிரஸ்தாபப் பெண்ணை எதிரே வந்த ஆட்டோ மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இச் சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த சுதா (வயது-28) என்ற பெண் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5)

## கற்பகச் சோலை திறப்பு

(திருநெல்வேலி)

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கற்பகச் சோலை நேற்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

பனை வள உற்பத்திப் பொருட்கள் இங்கு விற்பனை செய்யப்படும்.

(இ-5,43)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நாளைக்காலை 10 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்திற்குச் சமுகமளிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. றெ.இருதயநாதன் கேட்டுள்ளார்.

ஆசிரிர்கள் தம்முடன் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் தொடர்ச்சியான சேவையை உறுதி செய்யும் அதிபரின் சான்றிதழ் ஆகியவற்றை எடுத்து வருமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (இ-5)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு வெளியிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு முகவர்களாகச் செயற்படும் வாணிபர்களுக்கான கலந்துரையாடலொன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பளையில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.. இக் கலந்துரையாடலுக்கு அனைத்து முகவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது.

(ந-5)


தியாகத் திருவுருவே.....



காந்தீயம் வென்ற வீரன்

ஈழத்தாய் பெற்றெடுத்த ஈழத்துக் காந்தி பாரீர்
தியாகத்தின் சின்னமிவன் திலீபன் என்னும் பெயராம்
காந்தீயம் வென்ற இந்த வீரன் ஒரு புலியே
காலத்தால் அழியாது இவன் புகழ் காண்பீர்

யாழ்ப்பாணம் வர்த்தகர்கள்

[C/6640]



சாவகச்சேரி

அருள் மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

கேதார கௌரி விரதம்

அம்பிகை அடியார்களே!

எதிர்வரும் புரட்டாதி மாதம் 19ம் நாள் (05.10.2003) ஞாயிறு கேதார கௌரி விரதம் ஆரம்பம். விரதம் அனுஷ்டிப்பவர்கள் கடைசி நேரம் வரை காத்திராது முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்

தூர இருந்துவரும் விரதகாரர்களுக்காக நேரத்துடன் பூஜை நடைபெறும்.

அனைவரும் வருக அன்னை அருள் பெறுக

இங்ஙனம்

ப.மகாகணபதிசர்மா

தர்மகர்த்தா

[7466]



வாழ்த்துகின்றோம்

எமது பள்ளியின் முதல்வர்

செல்வி அன்னலட்சுமி கந்தையா



அவர்கள் அகவை அறுபதில் இன்று தனது பணியினை நிறைவு செய்து ஓய்வு பெறுகின்றார். இவரது ஓய்வுக் காலம் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அமைய வாழ்த்துகின்றோம்.

சமூகக்கல்வி மன்றம்,
கணித விஞ்ஞான மன்றம்,
யா/ பெரியபுலம் ம.வி

[7471]



புத்தகம் கட்டுநர் தேவை

பில் புத்தகங்கள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றை கட்டுவதில் (பைண்டிங்) அனுபவமுள்ள பெண்கள் தேவை. சுய விபரத்துடன் 19.09.2003 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு

வலம்புரி

இல.15 வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வரக் கல்லூரி அருகாமை)

என்னும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.